பேசும் படம்

அக்டோபர் '47 விலை அணா 6




ATE IN ENGLAND

பேசும் குரல்

பொருள் அடக்கம்

289, எஸ்பிளனேட், மதராஸ்.

மாலை 1	புரட்டாசி 10	மணி 2

ஆசிரியர் :—T. M. U. பதி.

அவர் வருவாரா?	...	[illegible]
ஆசிரியர் முன்னுரை		3
பிச்சைக்காரி	...	4
அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்?		7
குரலோசை	...	11
வினு? விடை!	...	17
உணவு நெருக்கடி	...	21
போ! போ! மேற்கே போ!	...	27
குரல் கூத்து	...	33
வசன கர்த்தா	...	37
கப்ப ரசம்	...	43
"பத்திரிகை படிக்காதே!"	...	47
"பூஞ்சோலை"	...	49
"சந்திரனே சாட்சி!"	...	57
"விஸ்டரா? மிஸ்டரா?"	...	61
தியாகி	...	65
என்ன சேதி?	..	68

——:o:——

குறிப்பு :— இதில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், இவைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே தவிர, அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

J. Nalk's.

அவர் வருவாரா?

இன்னே வருவரவர் என்நெஞ்சே
அஞ்சாதே
தன்னை எனக்களித்த தண்ணளியார்—
மன்னுலகில்
என்னை யவர்மறந்தால் என்னுயிர்
நிற்குமோ
இன்னும் உனக்கையம் ஏன் ?

ஆரத் தழுவி அவர்தந்த முத்தமிந்
நேரம் மறந்தனையோ நெஞ்சமே?—வீரத்
தமிழரவர், சொன்னால்
தவறார், வருவார்,
அமிழ்தின இனியதவர்
அன்பு.

M. R. பெருமாள்.

ஆசிரியர் - முன்னுரை

"பேசும் குரல்" முதல் வெளியீட்டிற்குப் பிரமாதமான வரவேற்புக் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பிரதிகளுக்காக ஏஜண்டுகளிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் பல கடிதங்கள் வந்தன. அவர்களுக்கெல்லாம் வேண்டிய அளவு பிரதிகள் அனுப்ப முடியாமற் போனதற்கு வருந்துகிறோம்.

இவ்வாறு எதிர்பார்த்த அளவிற்குமேல் கிடைத்த வரவேற்பு, தமிழ் நாட்டில் பத்திரிகை படிக்கும் மக்கள் தொகை வெகுவாகப் பெருகி யிருக்கிறதென்பதையும், நல்ல பத்திரிகை வெளிவருமானல் அதை ஆதரிப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்களென்பதையும் காட்டுகிறது. நமது பத்திரிகையை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்பதுதான் நமது அவா. கூடியவரையில் சுத்தமான தமிழிலேயே பத்திரிகை இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். முதல் மாலையின் முதல் மணியைப் பார்த்தவர்கள் இவ்விஷயத்தில் நாங்கள் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோமென்பதை ஒப்புக் கொள்வார்கள்.

ஆர்ட் காகிதத்தில் அச்சிட்டால் பத்திரிகை இன்னும் நன்றாயிருக்குமென்று பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆனல் எட்டுப் பக்கங்களுக்கு மேல் ஆர்ட் காகிதம் உபயோகிக்கக் கூடாதென்று அரசாங்கம் தடை யுத்தாவு விதித்திருக்கிறதென்பதை நேயர்களுக்கு நினைவூட்டுகிறோம். இந்த மாத வெளியீட்டில் அட்டையைத் தவிர, பத்திரிகையின் உள்ளேயும் நான்கு பக்கங்கள் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பட்டிருக்கின்றன.

இந்த இதழிலும் பொது விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளும், சினிமாத் தொழிலைப் பற்றிய கட்டுரைகளும், சினிமாத் துறையின் ரஸமான செய்திகளும், சிறு கதைகளும் இருக்கின்றன. வாசகர்கள் தங்களுக்கு எந்தப் பகுதிகள் மிகப் பிடித்தமாக இருக்கின்றன என்பதையும் இன்னும் எத்தகைய விஷயங்களைச் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறார்களென்பதையும் தெரிவிப்பார்களானல் அவர்களுடைய ஆவலை இயன்றவரையில் பூர்த்திசெய்யமுயலுவோம்.

"பேசும் குரலை"ப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் முன்னூறு முதல் ஐந்நூறு சொற்களுக்குள் சிறந்த கடிதங்கள் எழுதும் நேயர்களுக்கு ஆசிரியரின் உசிதப்படி பரிசு வழங்கப்படும். மேலும் அத்தகைய கடிதங்கள் "வாசகர் மன்றம்" என்ற பகுதியில் வெளியிடப்படும்.

பிச்சை

ஒட்டிய வயிறும் உல
கட்டிய கந்தைத் துணி
பாலுக் கேங்கும் பச்
தோலாய்த் தொங்கும்
பசியா றுது பதைத்தல்
கசிந்துள் ளுருகிக் கலு
உடைய பிச்சைக் காரி
நடைதள் ளாடி நளின
பங்க ளாவின் பக்கம்

நங்கை யொருத்தி நறு
குக்கலுக் கிட்டுக் கொ
பக்கலில் பரிவொடு பா
"சிச்சீ போ" வெனச்
பிச்சைக் கார்ரி பிச்சை
அவளும் பெண்தான்,
அவளது குழவியும் அ
உண்ணும் உணவும் உ
மண்ணில் அவர்க்கேன்
"நாட்டில் யாவரும் ந
பாட்டில் நாட்டினர்
"அன்பே கடவுளென்
என்பது மதங்களின் இ

நாய்க்குக் கிடைக்கும்
வாய்க்க வில்லை வையக
இதுதான் அறமோ?
பதிலுக காகப் பார்த்

க்காரி

ர்ந்த உடலில்
யும் கையில்
சைக் குழந்தை
மார்பைச் சுவைத்துப்
கண்டு
ழும் கண்களும்
யொருத்தி
விலாச
வந்தாள்.

ஞ்சுவை யடிசிலைக்
ஞ்சிப் பேசிப்
ர்த்து நின்ருள்.

சீறி விழுந்தாள்
கேட்கவும்.
அவளும் தாய்தான்,
ன்பிற் குரியதே.
டுக்கும் உடையும்
மறுத்தது சமூகம்?
ம்புமின் சமம்" எனப்
பாவலர் குழுவெலாம்.
றறியார் அறியார்"
ணையிலாக் கொள்கை.

நலமும் பலர்க்கு
மிதனில்!
இதுதான் மதமோ?
துநின் றேனே.

M. R. பெருமாள்.

மிஸ்டர் இஸ்மேல் தயாரிக்கும் 'பானு' என்ற முஸ்லிம் சமூகப் படத்தில் (ஹிந்தி) மாயாதேவி நடிக்கிறார்.

★

"முத்திபாளையத்தான்"

"எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந்நாடே—அதன்
முந்தை யராயிரம் ஆண்டுகள் வாழ்
முடிந்தது மிந்நாடே." [ந்து

என்று கிழக்குப் பாஞ்சாலத்திலிருக்கும் முஸ்லீம்கள் கிழக்குப் பாஞ்சாலத்தை வாழ்த்தி வணங்கிமகிழ்வர். அதுபோலவே மேற்குப்பாஞ்சாலத்தில் வாழும் சீக்கியர்களும, இந்துக்களும் மேற்குப் பாஞ்சால நாட்டின் மீது தனிப்பட்ட அன்பு உடையவர்களாயிருப்பார்கள். நாட்டுப் பற்று என்பது மனிதனுக்கு இயற்கையாக ஏற்படும் ஓர் ஒப்பற்ற உணர்ச்சி. "இது என் நாடு, இது நான் பிறந்த நாடு, என்று சொல்லிப் பெருமையடையாதவன் யாரேனும் இருக்கிறனு?" என்று கேட்டார் ஸர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கில ஆசிரியர். "தொண்டுபட்டு வாடுமென்தன் தூய பெரு நாட்டிற் கொண்டு விட்டங் கென்னையுடன் கொன்றுவி மின்புறுவேன்" என்று நாடு கடத்தப்பட்ட லஜபதிராய் புலம்பினுர்.

ஆனல் இன்று நாம் பாஞ்சால நாட்டிற் காண்பதென்ன? அந்நாட்டின் நிலையைப் பற்றிப் பத்திரிகைகளில் படிக்கும்போது நம் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சி என்ன?

சுமார் ஐம்பது லட்சம் மக்கள் தாங்கள் இல்லங்களைத் துறந்து கைக்கு அகப்பட்ட பொருளை எடுத்துக்கொண்டு ஓடுகிறுர்கள். தாங்கள் பரம்பரையாக வாழ்ந்த நாடு, தங்கள் நில புலன்கள் உள்ள நாடு, தங்கள் மாடு கன்றுகள் உள்ள நாடு, தங்கள் தாய் நாடு, இத்தகைய நாட்டை விட்டு ஓடுகிறுர்கள். அவர்கள் நாட்டிலுள்ள மரமும் செடியும், குன்றும் நதியும், கல்லும் மண்ணும் அவர்கள் உள்ளங்களில் இடம் பெற்றவை. அவைகளைத் துறந்து ஓடுகிறுர்கள். அந்தோ! என்ன, கொடுமையான காட்சி! எண்ணவும் இதயம் இளகும் காட்சி! ஏன் இவ்வாறு மக்கள் ஓடுகிறுர்கள்? நூற்றுக் கணக்கான ஆண்டுகளாகப் பரஸ்பர அன்

போடு ஒன்ருக வாழ்ந்து வந்த இந்துக்களும், முஸ்லீம்களும் இன்று மாத்திரம் ஏன் இவ்வாறு ஒருவரைக் கண்டு ஒருவர் அஞ்சியோடுகிருர்கள்? ஏன் வீடுகள் தீக்கிரையாயின? ஏன் பால் மணமாருப் பச்சிளங் குழந்தைகளும், மெல்லிடைப் பெண்களும் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள்? மனித உணர்ச்சி மறைந்து விட்டதா? மனித உணர்ச்சியற்ற மக்கள் வாழும் நாடு முன்னேறுமா? துஷ்ட மிருகங்களைக்கண்டு அஞ்சியோடுவதுபோல் முஸ்லீம்களும், சீக்கியர்களும் ஒருவரையொருவர் பார்த்து அஞ்சியோடுகிருர்கள். மனித உள்ளத்தைவிட்டு அன்பு ஓடி விட்டதா?

இந்திய அரசாங்கத்தாரும், பாகிஸ்தான் அரசாங்கத்தாரும் தங்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட சிறுபான்மை மக்களுக்கு எல்லாவகையிலும் ஆதரவளிப்பதாகப் பலதரம் படித்துப் படித்துக் கூறினர்கள். ஆனல் மக்கள் மனத்தில் அவ்வார்த்தைகள் பதியவில்லை. அவர்கள் காதுகளில் அந்த உறுதி மொழிகள் ஏறவில்லை. ஆகவே அவர்கள் உயிரைக் காப்பாற்றும் நோக்கத்துடன் தங்கள் நாட்டை விட்டு ஓடுகிருர்கள். நமது மாகாணத்திற்குக்கூடப் பத்தாயிரம் மக்கள் "தத்து புனல் பாஞ்சாலம்" ஆகிய தங்கள் சொந்த நாட்டை விட்டு அகதிகளாக ஓடிவருகிருர்கள். அவர்களுடைய உள்ளங்களின் வேதனையை அவர்கள்தான் அறிவார்கள். நம்மால் எண்ணவும் முடியாது.

இவ்வாறு மக்கள் லட்சக்கணக்கில் தங்கள் ஊர்களை விட்டு விட்டு வேற்றூர்களில் குடியேறுவதால் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகள் நூற்றுக்கணக்கில் இருக்கும். இவற்றை சமாளிப்பதற்கே அரசாங்கத்தின் சக்தியெல்லாம் உபயோகப்பட்டு விட்டால், அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள நம் நாடு பல துறைகளிலும் முன்னேறி, உலக சமுதாயத்தில் உயர்ந்த நிலையை வகிப்பதற்கு வேண்டிய திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறையில் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு அவகாசம் இருக்குமா? அந்த அவகாசம் இல்லாவிட்டால் நம் நாடு தாழ்ந்த நிலையிலேயே இருக்க வேண்டியதுதானு?

பஞ்சாலத்திலும், வங்காளத்திலும், பீகாரிலும், டில்லியிலும் வகுப்புக் கலகங்கள் ஏற்பட்டது மிக வருந்தத்தக்க விஷயம். இந்திய சரித்திரத்தின் இந்த அத்தியாயம் இந்திய மக்களுக்கு அவமானத்தைத் தரும் அத்தியாயம்

வங்காளத்தில் ஏற்பட்ட இந்து முஸ்லீம் கலகங்களை அடக்குவதற்கு அரசாங்கத்தார் அரும்பாடு பட்டார்கள். ஆனல் கலகம் நின்றபாடில்லை. போலீஸார் உபயோகித்த கண்ணீர்ப் புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், ஊரடங்குச் சட்டம், போர் வீரர்களின் யந்திர பீரங்கிப் பிரயோகம், எதுவும் கலகத்தை நிறுத்தவில்லை. ஆனல்,

ஒரு மனிதர் தனியாக வங்காளத்திறகுச் சென்றார். அவர் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. அவர் உள்ளத்தில் பொங்கியெழுந்த அன்பே அவருக்குத் தனி ஆயுதம். மக்களிடம் சென்றார். அவர்களுடைய துயரங்களை விசாரித்தார். அவற்றைத் தம்முடைய கண்ணீரால் கழுவினார். மக்கள் மறுபடியும் மனித உணர்ச்சியைப் பெற்றார்கள். பகைமையைப் பகைமையால் வெல்ல முடியாதென்று காட்டினார். பகைமையை அன்பினால் தான் வெல்ல முடியும் என்றார்.

பழிக்குப் பழிவாங்கும் மனப்பான்மை ஒழிய வேண்டும் என்றார். மக்கள் இப்போதுபடும் அல்லலைத் தீர்ப்பதற்கு அதுவல்ல வழி என்றார். இன்று ஆயிரம் முஸ்லீம்களை இந்துக்கள் கொன்றால், நாளைக்கு இரண்டாயிரம் இந்துக்களை முஸ்லீம்கள் கொல்வார்கள். இன்று கிழக்குப் பாஞ்சாலத்தில் முஸ்லீம்கள் வீடுகள் தீக்கிரையானால், நாளைக்கு மேற்குப் பாஞ்சாலத்தில் இந்துக்கள் வீடுகள் வெந்து சாம்பலாகும். ஆகவே, பகைமை வளரவும், துன்பமும் துயரமும் அதிகரிக்கவும், அச்சம் மிகவுந்தான் பழிக்குப் பழிவாங்கும் மனப்பான்மை உதவி புரியுமே தவிர, சந்தோஷத்தோடும் பயமில்லாமலும் வாழ்வதற்கு உதவிபுரியாது என்று அந்த மனிதர் அறிவுறுத்தினார் மக்களுக்கு. மக்கள் அவர் சொற்களைக் கேட்டு அதன்படி நடக்க ஆரம்பித்தார்கள். பகைமையிருந்த இடத்தில் அன்பு குடி கொள்வதைக் கண்டார்கள். மனங்களித்தார்கள். "அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார், மறத்திற்குமஃதே துணை" என்ற திருக்குறளின் உண்மையை அனுபவத்திற் கண்டனர் மக்கள். கண்ணீர்ப் புகையும், துப்பாக்கிப் பிரயோகமும் திறக்க முடியாத அவர்கள் உள்ளங்களை அன்பென்ற ஆயுதம் எளிதில் திறந்தது. "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்"? என்ற வள்ளுவர் கூற்று வெற்றி பெற்றது. வெல்க அன்பு நெறி!

"மஹாநந்தா" என்ற கன்னடப் படத்தின் டைரக்டரான திருவாளர் T. ஜானகிராமன் அவர்களுக்கும், திருமதி இந்திராவதி என்பவர்க்கும சமீபத்தில் திருமணம் நடந்தது.

அதே சமயத்தில் அவருடைய சகோதரர் திருவாளர் T. இராஜாராமனுக்கும் திருமதி புனிதவதிக்கும திருமணம் நடந்தது.

மணமக்களை நாம் மனதார வாழ்த்துகிறோம்.

பேசும் குரல்

விளம்பர விகிதங்கள்

முதல் அட்டை	ரூ. 300
2, 3-வது உள் அட்டை	ரூ. 150
கடைசி அட்டை ..	ரூ. 200
உள் பக்கம்	ரூ. 75
அரைப் பக்கம்	ரூ. 40

வருட சந்தா ரூ. 5.

சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவை வரவேற்கப்படும். பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு ஆசிரியர் விருப்பப்படி பரிசளிக்கப்படும். கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப விரும்புவோர் போதிய அளவு ஸ்டாம்புகள் அனுப்பவேண்டும்.

—: ஆசிரியர் :—

பேசும் குரல் காரியாலயம்,
289, எஸ்பிளனேட்,
மதராஸ்.

என்ன சேதி?

ஏ. வி. எம். ஸ்டுடியோ, காரைக்குடி

"வி 3" (நாம் மூவர்) என்ற தமிழ்ப்படம் ஒன்றை எடுக்கிறுராம். இதில் மூன்று பிரம்மச்சாரிகளின் கதை வருகிறதாம்.

ஹிந்தி "ராம ராஜ்யம்" என்னும் படத்தைத் தமிழ் மொழியில் பேசவும், பாடவும் வைத்து சிக்கிரமாக தீபாவளிக்கே திரையில் வரும்படி செய்து விடுவாராம். இத்துடன் "வேதாள உலகமும்" சேர்ந்து வெளியாகும் போலிருக்கிறது.

தற்காலத்திற்கு ஏற்ற முறையில் "தொழிலாளி" என்ற படத்தை எடுப்பதற்கு யோசனை செய்து கொண்டிருக்கிறுராம் ஏ. வி. எம். செட்டியார்.

நியூ தியேட்டர்ஸ், கல்கத்தா

இங்கு எடுக்கப்படும் ஸ்ரீ ஜெகதீஷ் பிஸிம்ஸாரின் "ராமதாஸ்" தமிழ்ப் படம் தசராவுக்குப் பல இடங்களில் திரையிடப்படும் என்பது உறுதி.

இதில் ஒய். வி. ராவ், ருக்மணி, களக்காடு ராம நாராயண அய்யர், முதலியோர்கள் நடிக்கிறுர்கள். களக்காடு ராம நாராயண அய்யர் மிகப் பிரமாதமாக நடித்தும் பாடியுமிருக்கிறுர். ஒய். வி. ராவ் தமது திறமையை இப்படத்தில் காட்டி டைரக்ட் செய்திருக்கிறுர்.

"சினிமாத் துறையில் சிபார்ஸா?"

டைரக்டரோ, கதை வசன கர்த்தாவோ, பாட்டுக்காரரோ, முதலாளியோ அல்லது படத்தில் சம்பந்தப்பட்ட எவராயிருந்தாலும் தங்களுக்கு வேண்டியவர்கள், தங்களுக்கு உறவினர்கள், இனத்தவர்கள் என்கிற முறையில் ஏதாவது அவர்களுக்கு வருவாய் கிடைக்க வேண்டும் என்று விரும்பி, சலுகை காட்டாமலும், சிபார்சு செய்யாமலும் படத்திற்குப் பொருத்தமானவர்களையே போட்டுப் படத்தை எடுக்க வேண்டும். இல்லையேல், படம் பாம்பின் படம்தான்! படம் ஓடுவதற்கு முதலாளிகள் மகுடி ஊத வேண்டியதுதான்.

"தமிழ்ப்படத்திற்கு இத்தாலி டைரக்டரா?"

ஒரு கதை வசன கர்த்தாவையும், ஒரு "இத்தாலிய" டைரக்டரையும் தமிழ்படத்திற்கு ஏற்ற கதையொன்றைத் தேர்ந்தெடுக்கும்படி ஒரு படமுதலாளி கேட்டுக் கொண்டாராம். தமிழ் மொழி தெரியாத "இத்தாலிய" டைரக்டரும், ஆங்கிலத்தில் அதிகம் பயிற்சி இல்லாத கதைக்காரரும் 1½ மணிநேரம் அநேக கதைகளைப் பற்றிப்பேசினார்களாம். ஆனால் ஒரு முடிவுக்கும் வரவில்லையாம்.

"கதை எழுத மதுவும் மங்கையும் வேண்டுமா?"

சினிமாத்திரைக்கு ஒரு கதை எழுதவேண்டுமானால் மதுவும் மங்கையும் பக்கத்தில் இருந்தால்தான், நல்ல உயர்வான நோக்கங்கள் உள்ளத்தில் உதயமாகிக் கதையில் அமையுமென்பது சில கதை வசனகர்த்தாக்களின் அபிப்பிராயம். இவைகளுக்கும் இணங்குகிறார்களாம் பல பட முதலாளிகள். இந்த முறை சினிமா தொழிலுக்குக் கேடன்றி வேறென்ன பயக்க முடியும்?

"உச்சரிப்புத் தெரியாத நடிகர்கள்"

ஒரு தமிழ்ப்படத்தின் பிரதம பாகத்திற்கு "நந்தவனம்" என்பதற்கு "நந்தவணம்" என்றும், "கலை" என்பதற்கு "களை" என்றும், "உலக்கை" என்பதற்கு "உளக்கை" என்றும், "பால்" "பாள்" என்றும், சொல்லக் கூடியவரை பாடுகிறார் என்பதற்காக, நடிகராகப் போட்டால், அப் படம் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்.

"தேவதாசியில்" N. S. கிருஷ்ணன்.

"புராணப் படங்களில்" "கட் பாடியா?"

"ராஜ ராஜேஸ்வரியின்" "துளசி ஜலந்தர்" என்னும் தமிழ் புராணப்படத்தில் நடிக்கும் பி. கண்ணும்பாவுக்கு தற்காலத்தில் நாகரீகப் பெண்கள் அணியக்கூடிய "கட் பாடி" அணியப்பட்டிருக்கிறது. புராணக்காலத்தில் "கச்சு" தான் பெண்கள் அணிவது வழக்கம் என்று தெரிகிறது. அந்த வழக்கத்திற்கு இது முரண்பாடல்லவா?

"வாங்கும் கடனுக்கு வட்டி இல்லையாம்!"

"பாகிஸ்தான்" சர்க்காரால் பொது ஜனங்களிடமிருந்து வாங்கப்படும் சர்க்கார் கடனுக்கு வட்டி அளிக்கப்படாதென்பது அச்சர்க்கார் உத்தரவு. ஒருவனுக்குக்கடன்கொடுத்துத் திருப்பி வாங்கும்போது அத்தொகைக்கு வட்டிசேர்த்து வாங்கக் கூடாதென்பது முஸ்லீம் மத போதனையாம். அதை அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள் பாகிஸ்தான் சர்க்கார் நிர்வாகஸ்தர்கள்.

"இங்கிலாந்திலும் இந்தியர் கொடி!"

இங்கிலாந்தில் "பர்மிங்காம்" என்னுமிடத்தில் உள்ள ஓர் இந்தியர் சங்கக் கட்டிடத்தின் மேல் "இந்திய யூனியன்" கொடி பறக்கிறதாம்! இந்தியன் என்றால் வெறுப்படையும் வெள்ளையர்கள் இன்று தங்கள் நாட்டில் இந்தியர் கொடியை பறக்கவிட்டு பார்க்கிறார்கள் என்றால், இது ஒரு பெரிய மனமாற்ற மல்லவா?

"அத்தனைக்கும் போலீஸ் அதிகாரியா?"

ரெயில், பஸ், சினிமா, நாடகம் இவைகளில் டிக்கெட் வாங்கவும், கடைகளில் துணி முதலியவைகள் வாங்கவும், போஸ்டாபீஸ், ரேஷன் ஆபீஸ் முதலிய பொது நிர்வாக ஸ்தலங்களில் அவரவர்கள் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவும், "க்யூ" நின்று வாங்கும்படி அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்கள். அந்த முறையைப் பொது ஜனங்கள் தாமாகவே நின்று உபயோகித்துக் கொள்ளக் கூடாதா? அது வில்லாமல்

படித்தவர் படிக்காதவர் எல்லோரும் ஒருவருக்கொருவர் சச்சரவுசெய்து கொண்டு தள்ளிக் கொள்ளுகிறார்கள். இதற்கு ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் வந்து தீர்த்து விட வேண்டி இருக்கிறது. உயர்வான உத்தியோகம் வகித்து அதிகச் சம்பளம் பெறும் ஒருவருக்கு, ஒரு போலீஸ் சிப்பந்தி வந்து புத்தி சொல்லிக் கொடுக்கவேண்டி இருக்கிறது. ஏன் இதை அவர்கள் உணரக்கூடாது? ஹோட்டல்களில் "க்யூ" நின்று அடித்துக் கொள்ளும் நிலைமை எல்லாச் செய்கையையும் விட மிகவும் கேவலமானது.

"நனைந்த உடையால் நபர்களுக்கு கஷ்டம்!"

மழைகாலம் இது. பஸ், டிராம் இவைகளில் மழை பெய்யும் போது, மழையில் நனைந்து கொண்டுவரும் "ரெயின்கோட்" அணிந்திருக்கும் கனவான்கள், பஸ், டிராம்களில் ஏறுகிறார்கள். ஏறினவர்கள் ஒருபுறமாக ஒதுங்கி நின்றால் இதை எழுத அவசியமில்லை. அவர்கள் நனைந்த அந்தப் பாழும் "ரெயின்கோட்டோடு," தண்ணீர் சொட்டச் சொட்ட ஜனங்களிடையில் நெருங்கிக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அவர்கள் கோட்டிலிருந்து வடியும் தண்ணீர் அவர்கள் இருபக்கங்களிலும் இருக்கும் பிரயாணிகளின் உடைகளை நனைத்து விடுகிறது. வெள்ளைக்காரர் நாகரீகத்தைக் கையாளுகிறார்களே தவிர அதற்குத் தக்கவாறு நடந்துகொள்ளத் தெரியவில்லையே! பஸ், டிராம் நிர்வாகஸ்தர்கள் நனைந்த ரெயின் கோட்டோடு வரும் கனவான்களை ஏற்றாமல் தடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"சென்னையில் இன்னும் அவதியா? அகதியா?"

பஞ்சாபில் பாகிஸ்தான் இந்துஸ்தான் வேற்றுமையால், வெளியேறிய பதினாயிரக் கணக்கான இந்து அகதிகள் சென்னைக்கு வருகிறார்கள்! வந்து

லட்டிகா என்ற இந்த ஒய்யாரி ஜான்ஜீர் என்ற படத்தில் இவ்வாறு ஆடுகிறார்.

கொண்டிருக்கிறார்கள்! அகதிகளாகவரும் அவர்களால் சென்னைக்கு இன்னும் அதிக அவதிதான் உண்டாகும் போலிருக்கிறது.

"வெள்ளையர் சிலைகளை நீக்க வெள்ளையர் சிபார்ஸ்!"

இந்தியாவிலிருக்கும் வெள்ளையர்கள் உருவச்சிலைகளை எடுத்து லண்டனுக்குக் கொண்டுபோக வேண்டுமென்று லண்டனில் ஒரு வெள்ளைக்கார கனவான் தீர்மானித்தாராம்! வெள்ளையர் ஆட்சி வெளியேறின பிறகு அவர்களுடைய சுடமரியாதயைக் காப்பாற்றிக் கொள்ளவிரும்புவது முறைதானே?

"நடிகனுவதற்கு நல்லவாத்தை"

புதிதாக எடுக்கப்போகும் ஒரு படத்தில், ஒரு நடிகன் தனக்கு ஒரு இடத்தைத்தேடுவதற்காக, அப்படத்தின் கதைக்காரரையோ, டைரக்டரையோ, பாட்டுக் காரரையோ அணுகி, அவர்கள் மூலம் நுழையத்தந்திரமாகபேசி, தான் ஒரு படம் ஒரு பெரிய பணக்காரர் மூலம் எடுக்கப்போவதாகவும், அப்படத்திற்கு வேண்டிய கதை, டைரக்ஷன், பாட்டு எல்லாவற்றிற்கும் அவர்களையே போடப் போவதாயும், தித்திக்கப்பேசி, அவர்கள் உதடுகளில் தேனைத் தடவுவதுபோல் பசப்பு வார்த்

கார்கண்டாடும் களிமயில்களா?

இல்லை, ஜான்ஜீரில் ஒரு நடனக் காட்சி!! கண் நிறைந்த காட்சி!!

தைகள் சொல்லி, முடிவில் அவனுக்கு அவர்கள் எடுக்கும் படத்தில் ஓர் இடம் அளிக்கும்படி அடிபோடுகிறான். இது இக்காலத்து சினிமா நடிகர்களின் சிறந்தவேலை!

"பணக்காரர்கள் வெறும் பாது காப்பாளர்தான்!"

"ஏ பணக்காரர்களே! நீங்கள் உங்களுக்குச் சொந்தமென்று வைத்திருக்கும் பணம் உங்களுடையதல்ல. அது தேசத்தினுடையது! பொது ஜனங்களுக்குச்சொந்தமானது! நீங்கள் அந்தபொருளுக்கு வெறும் தர்ம கர்த்தாக்கள் தான்" என்று மகாதமா காந்தி கல்கத்தா புனர் நிர்மாண வேலைக்குப் பணம் திரட்டும் சமயத்தில் பணக்காரர்களுக்குச் சொன்னாராம். மகாத்மா காந்தியை தெய்வமாகக் கருதும் பணக்காரர்கள் காந்தியின் வார்த்தைக்கு இணங்கு வார்களா?

"உணவுப்பொருளுக்கு உளவாளி தேவை!"

"தன் சொந்தப் பிரயோசனத்திற்குப் போக அதிகமாக உணவுப் பொருள் வைத்திருக்கும் இடத்தையும், நபரையும் சர்க்காருக்குத் தெரியப்படுத்துகிறவர்களுக்கு, வெகுமானம் அளிக்கப்படும். மேலும் அப்பேர்ப்பட்ட உளவு தெரியப்படுத்துகிறவர்களுடைய விலாசம், விபரம் முதலியவை ரகசியமாகவே வைக்கப்படும்" என்று சர்க்கார் ஒரு விளம்பரம் போட்டு அமுலில் நடத்தினால், ஏராளமான

கிருஷ்ணன் நடிக்கும் தேவதாசியில் மதுரம் இல்லாமல் முடியுமா?

உணவுப்பொருள் கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை.

"ஆஸ்பத்திரிகளில் காசு பறித்தல்."

சென்னையிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரி முதல் சின்ன கிராமத்திலிருக்கும் "ரூரல்" டிஸ்பென்ஸரி வரையில் முதலில் ஆஸ்பத்திரிக்குள் நுழையக்காசு! ஒரு துண்டு "பிளாஸ்திரி" போடுவதற்குக் காசு! ஒரு "கட்டு" கட்டுவதற்குக் காசு! பேசுவதற்குக் காசு! நிற்பதற்குக்காசு! இப்படித் தோட்டி முதல் சகல உத்தியோகஸ்தர்களும் "காசு!" "காசு!!" என்று கழுகு மாதிரி பிடுங்குகிறார்களே! இதை கவனிக்கக் கூடாதா? வெள்ளையர் ஆட்சியில்தான் இவைகளைப் பற்றிச் சொல்லக்கூடாது! சொந்த ஆட்சி வந்தபிறகாவது இந்தத் தொந்தரவுகள் நீங்கக்கூடாதா?

மைதிலி

எட்டையாபுரம் பாரதி ஞாபகார்த்த நிதிக்காக "மைதிலி" என்ற தமிழ் சமூக நாடகம் சென்னை சிவில் சப்ளைஸ் ரிக்ரியேஷன் கழகத்தாரால் (The Civil Supplies Recreation Club, Board of Revenue, Madras) 5-10-47 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5-மணிக்கு மயிலை ரசிக ரஞ்சனி சபை மண்டபத்தில், சென்னை அரசாங்கக் கல்வி மந்திரி திரு T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் முன்னிலையில் நடைபெற்றது.

கச்சா பிலிம் கண்ட்ரோல் இல்லை

சண்டைக் காலத்திலிருந்தது போல், இப்போதும் கச்சா பிலிம் விநியோகத்தை அரசாங்கம் கட்டுப் படுத்தப் போகிறது என்ற வதந்தி சினிமா உலகில் இப்போது உலவுகிறது. அதனால் பலர் கச்சா பிலிம் வாங்குவதற்கு அவசரப்படுவதாகத் தெரிகிறது. ஆனால் இந்த வதந்திக்கு எவ்வித ஆதாரமுமில்லையென்பதை நாம் உறுதியாகக் கூறுகிறோம்.

இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குப் பின்னர் கச்சா பிலிம் இறக்குமதி ஓரளவு குறையக்கூடும் என்று மாத்திரம் இப்போது கூறலாம்.

சினிமா உலகிற்குப் பெருத்த நஷ்டம்

வருந்துகிறோம்

ஆசிரியராய் வாழ்க்கை ஆரம்பித்து, பலரும் போற்றும் சினிமா டைரக்டராகிய "மாஸ்டர் விநாயக்" ஆகஸ்டு மாதம் 19-ஆம் தேதியன்று மரணமடைந்த செய்தி கேட்டு நாம் மிகவும் வருந்துகிறோம். அவர் கல்வியறிவும், கற்பனைசக்தியும் பெற்றவர். பல படங்களில் நடித்திருக்கிறார். பல படங்களை "டைரக்ட்" செய்திருக்கிறார். P. K. ஆட்ரே, V. S. கண்டேகர் போன்ற சிறந்த எழுத்தாளர்களின் கூட்டுறவினால் அறிவூட்டும் நகைச்சுவை நிறைந்த பல சமூகப் படங்களை சிருஷ்டி செய்தார்.

இவர் இறக்கும்போது இவருக்கு வயது நாற்பத்தொன்றுதான். இவ்வளவு சிறுவயதிலேயே இவர் சிறந்த பேரும் புகழும் பெற்றது வியப்பிற்குரிய விஷயமாகும். அவர் மரணம் சினிமா உலகிற்குப் பெருத்த நஷ்டம்.

அவருடைய குடும்பத்தினர்க்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர் ஆன்மாவுக்கு சாந்தியை அருளுமாறு இறைவனை இறைஞ்சுகிறோம்.



முருகையா, திருத்துறைப்பூண்டி.

மஹாத்மா காந்தியைப் போட்டு ஒரு படம் பிடித்தால் பணம் ஏராளமாகக் கிடைக்குமல்லவா?

அவர் பக்கத்தில் நெருங்குவதற்கு வேண்டிய தகுதி இந்தியப் பட முதலாளிகளில் யாருக்கிருக்கிறது?

ராயப்பன், சென்னை.

"ஷர்டி ஸ்டுடியோ" என்ற பெயர் புது மாதிரியாக இருக்கிறதே! அதில் பிடிக்கப்படும் படம் என்னவோ?

ஸ்டுடியோவின் பெயர் புது மாதிரியாக இருப்பதுபோல், அதில் எடுக்கப்படும் படமும் "நவீன வள்ளி" என்ற புது மாதிரியான படந்தான்.

கோமதி, சேலம்.

டி. ஆர். ராஜகுமாரி கருப்பா? சிகப்பா?

ஏன்? கருப்பென்றறிந்தால் அவருடைய நடிப்பை நீர் ரசிக்க மாட்டீரோ?

வேங்கடராமன், தலைஞாயர்.

"வசுந்திரா தேவி", "கண்ணம்பா" இவர்களில் யார் நல்ல நடிகை?

கண்ணம்பாதான் சிறந்த நடிகை என்பதில் சந்தேகமில்லை. எனினும், ஆளை மயக்கும் சிருங்கார கட்டங்களிலும், மேல் நாட்டு நாட்டியங்களைக் "காப்பி" அடிப்பதிலும் வசுந்திரா கை தேர்ந்தவர்.

கோவிந்தராஜுலு, திருச்சி.

"கிருஷ்ண பக்தி", "கிருஷ்ண விஜயம்" என்று இரண்டு படங்களைப் பற்றிய விளம்பரம் வருகின்றதே, இரண்டும் ஒன்றுதானே?

பக்தியாயினும், விஜயமாயினும் நம் பட முதலாளிகளுக் கென்ன கவலை? படம் பிடித்தால் பணம் சம்பாதிக்க முடியும், உங்களைப் போல் பார்க்க ஆட்கள் இருக்கும் வரையில். ஆகவே, இரண்டும் ஒரே கதைதான்—ஸ்டுடியோவும், நடிகர்களும் வேறாயிருப்பினும்.

கிருஷ்ணன், திருத்துறைப்பூண்டி.

"உதயணன்" என்று ஒரு படம் எடுத்தார்களே, அது ஏன் எங்கள் ஊருக்கெல்லாம் வரவில்லை?

"உதயணன்" என்று ஆடவன் பெயர் போட்டதால் ஓடவில்லை என்று, "வசுவதத்தா" என்னும் வனிதையின் பேரில் வருகிறதையா அந்தப் படம்!

சின்னையா, சிலோன்.

தவமணி தேவிக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?

தவத்தில் சிறந்த அம்மையாருக்குக் கல்யாணம் எதற்கு?

ராஜம், கோவை.

வி. வி. எஸ். அய்யர் ஏன் "கோகுலதாசி" என்னும் படத்தை "டைரக்ஷன்" செய்யவில்லையாம்?

அவரோ சன்னியாசி! படமோ "கோகுலதாசி"! எப்படி சுவாமி அவர் "டைரக்ஷன்" செய்வார்? "விசுவாமித்திரர்" கதை அவருக்குத் தெரியாதா?

மார்டன் தியேடரில் தயாரிக்கும் ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணியில் மூன்றாவது கேள்வியில் வரும் 3-வது பெண்.

சற்குணம், சிவகங்கா.

ஆர். கே. ஷண்முகஞ்செட்டியார் காங்கிரஸ்காரர் அல்லவே! அவருக்கு எப்படி நிதி மந்திரி ஸ்தானம் அளிக்கப்பட்டது?

சுதந்திர இந்தியாவில் கட்சி பேதம் எதற்காக வேண்டும்? மேலும் அந்தப் பதவிக்கு அவரை விடத் தகுதியுள்ளவர் யார்?

நடராஜன், மவுண்ட் ரோட்.

"ப்ரகதி ஸ்டுடியோ" பழய கூட்டாளி சிவஞ் செட்டியார், "கணேஷ் ஸ்டுடியோ" என்ற பெயரில் ஒரு ஸ்டுடியோ கட்டுகிறது உண்மையா?

"ஆம்."

முத்துசாமி, திருவாரூர்.

ஒரு நடிகையின் எந்த முறையான நடிப்பு, இளைஞர்களுடைய இதயங்களை இழுக்கிறது?

பாதி மார்பு தெரியும்படி நடிக்கும் கட்டங்கள்தான்! வயோதிகரையும் வசீகரிக்கின்றன.

சக்கரவர்த்தி, பெங்களூர்.

உலக முடிவு எப்பொழுது?

உம் முடிவு உண்டாகும்போது!

கோபாலகிருஷ்ணன், தென்காசி.

இரவு என்பது தூங்குவதற்கு மட்டுந்தானா?

இல்லை. காதல், களவு, கடவுள் வழிபாடு, நடிப்பு, படப்பிடிப்பு, இன்னும் பல காரியங்களுக்குந் தான்!

ஷேக் அப்துல்காதர், திருநெல்வேலி

சினிமா நடிகைகளுக்குக் கல்யாணம் உண்டா?

ஏன்? அவர்களும் மனித வர்க்கந்தானே!

சிற்சபேசன், தஞ்சாவூர்.

"மின் மினி" என்றொரு படம் வருகிறதாமே! அது என்னவிதமான படம்?

காலஞ்சென்ற 'இந்துநேசன்' பத்திரிகை ஆசிரியர் "லக்ஷ்மி காந்தனின்" வாழ்க்கையை ஒட்டி இருக்குமென்று பலர் பேசிக் கொள்கிறார்கள்.

குலாம் காதர், மைசூர்.

தனலக்ஷ்மி, வரலக்ஷ்மி, மகாலக்ஷ்மி, கெஜலக்ஷ்மி, வீரலக்ஷ்மி என்று ஒரே லக்ஷ்மி மயமாகவே, சினிமாக் கம்பெனிகளுக்குப் பேர் கொடுக்கிறார்களே! அதன் காரணமென்ன?

"குலாம் காதருக்கும், கோகுலாஷ்டமிக்கும் என்ன சம்பந்தம்?" என்ற பழமொழியை நீர் நிரூபிக்கிறீர்.

தம்பு செட்டி, திண்டிவனம்.

"மாரியப்ப சுவாமியார்" நடித்த "நாத விஜயம்" என்னும் படம் எப்பொழுது வெளிவரும்?

திருவாங்கூர் நேஷனல் பாங்க் செக்குக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்களாம்! செக் வந்தவுடன் சம்பளம் பட்டுவாடாசெய்து, படத்தை வெளியிடுவார்கள்.

இரத்தின சபாபதி, மன்னார்குடி.

காமத்துக்கும், காதலுக்கும் பேதமுண்டோ?

காமம் உடல்களைப் பிணைக்கும்; காதல் உயிர்களைப் பிணைக்கும்.

ரங்கசாமி, பள்ளங்கோயில்.

புதுச் சர்க்கார் படத்தொழிலை நிறுத்தி விட்டால், தற்கால நடிகைகள் என்ன செய்வார்கள்?

பலர் அவர்களுடைய பழய தொழிலையும் நடத்திக் கொண்டு தான் நடிகைகளாக இருக்கிறார்கள் படத் தொழில் போனால், பழய வேலையில் பலமாக ஈடுபட்டு விடுகிறார்கள்!

எஸ். தனுஷ்கோடி, பட்டுக்கோட்டை.

"பைத்தியக்காரன்" படத்துக்கு "பஞ்சு கிருஷ்ணன்" டைரக்ஷன் என்று போடப்பட்டிருக்கிறதே, அது என். எஸ். கிருஷ்ணன்தானே?

இல்லை. அவர் வேறு கிருஷ்ணன்.

'ரதிகா' என்ற தெலுங்குப் படத்தில் பாலசரஸ்வதி நடித்தும் பாடியும் இருக்கிறார்.

பக்கிரிசாமி, தோப்படித்திடல்.

எழுத்தாளர்கள் ஏன் தங்கள் வாழ்க்கைச் சித்திரத்தை எழுதி, அவர்கள் உயிரோடு இருக்கும்போதே வெளியிடுவதில்லை?

எத்தனையோ பேர் சுய சரிதைகள் எழுதி யிருக்கிறார்களே! நீர் பார்க்கவில்லை போலும்!

வைத்தியநாதசாமி, பாண்டி.

"மதுரை வீரன்" படம் பிடிக்கப் பல விளம்பரங்கள் வந்தனவே! அது என்னவாயிற்று?

ஸ்டுடியோவுக்குச் செல்லுவதற்கு வேண்டிய முஸ்தீப்பே இன்னும் முடியவில்லை!

சேகரன், செந்தாமரைக்கண்.

என். எஸ். கிருஷ்ணன் "நாத விஜயத்தில்" நடிக்க மறுத்து விட்டது உண்மையா?

அவர் மாத்திரமல்ல! படம் சம்மந்தப்பட்ட அத்தனை பேர்களுந்தான் என்று கேள்வி.

வீரய்யாதேவர், நெடும்பலம்.

ஒரு நடிகை, பல குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டால் லாபமா? நஷ்டமா?

பணம், பலம் இரண்டிலும் நஷ்டம் ஏற்படும். குழந்தைகளின் மேல் இஷ்டம் ஏற்படும்.

சங்கரன், சங்கரன்கோயில்.

டி. ஆர். இராஜகுமாரி இப்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவர் கணவர் பெயர் என்ன? குழந்தைகள் எத்தனை?

அவர் இப்போது ஜெமினி "சந்திர லேகாவில்" நடிக்கிறார். மற்றவை, அவருடைய சொந்த விஷயங்கள்.

கே. ஆர். புருஷோத்தமன், சென்னை.

இசைவாணர் திரு. எம். கே. டி. பாகவதர் போன்ற தமிழன்பும், காங்கிரஸ் பற்றும் கொண்ட தமிழ் நடிகர் யாரேனும் உண்டா? அவரது வயதும், விலாசமும் என்ன?

திரு. எம். கே. டி. பாகவதர்' இசைவாணர், தமிழன்பர் என்பது தெரிகிறது. அவர் காங்கிரஸ் பற்றுடையவரா என்பதை அவரையே விசாரித்தால்தான் சொல்ல முடியும்.

அவருக்கு வயது முப்பதுக்கு மேலாகிறது. விலாசம்; கண்டோன்மெண்ட், திருச்சி.

தமிழ்நாட்டில், பாகவதர் கிருஷ்ணன் விடுதலைக்காக உண்மையாக உழைத்த நடிகர், டைரக்டர், பட முதலாளி, பத்திரிகைக்காரர் யார்?

டைரக்டர் கே. சுப்பிரமணியமும், நடிகை மதுரமும் உண்மையாக உழைத்தார்கள்.

மற்றவர்கள் சிலர் பணத்திற்காகவும், சிலர் தங்கள் சுயநலத்திற்காகவும் உழைத்தார்கள் — பாகவதர் கிருஷ்ணன் விடுதலைக்குப் பாடுபடுவதாக விளம்பரப்படுத்திக் கொண்டு.

கே. ராமையா, திருத்துறைப்பூண்டி

"நாம் இருவர்", "ஸ்ரீ வள்ளி" என்ற படங்களில் டி. ஆர். மகாலிங்கம் "கோடையிலே இளைப்பாற்றி," "காயாத கானகத்தில்" என்ற பாட்டுக்களில் சில இடங்களில் ஆலாபனை செய்வது சொந்தக் குரலா? இரவல் குரலா?

பாட்டு, ராகம், ஆலாபனை அனைத்தும் இரவல்தான். ஆனல் குரலென்னமோ சொந்தந்தான்.

உணவு நெருக்கடி

" முத்திபாளையத்தான் "

பஞ்சம்! பஞ்சம்!! எங்கும் பஞ்சம்!!! எல்லாப் பொருள் களுக்கும் பஞ்சம்!!!! அரிசி யில்லை, பருப்பில்லை, விறகில்லை, துணியில்லை, குடியிருக்க வீடில்லை, எதுவும் போதியளவு இல்லை. வேண்டிய அளவு மோட்டார்கள் கிடைக்கவில்லை, கெடியாரங்கள் கிடைக்கவில்லை, சிகரெட்டுகள் கிடைக்கவில்லை, சீமைச் சாராய வகைகள் கிடைக்கவில்லை என்று வருந்தும் பணக்காரர்கள் இருக்கிறார்கள். ஆனால் வயிற்றுக்குப் போதிய அளவு உணவில்லாமல் வாடும் மக்களின் தொகை மிகமிகப் பெரியதாயிருக்கிறது. அவர் களுடைய கூக்குரல் காதைத் துளைக்கிறது. உல்லாச வாழ்க் கைக்கு வேண்டிய பொருள்கள் எவ்வளவு பணங்கொடுத்தாலும் வேண்டிய அளவில் கிடைக்க வில்லையே என்று ஒரு சில பணக் காரர்கள் ஏங்குகிறார்கள். ஆனால் உயிரும் உடலும் ஒன்றாயிருப்ப தற்கு வேண்டிய அளவு உணவு கிடைக்கவில்லையே என்று ஏழைமக்கள் வாடுகிறார்கள். இது நம் மாகாணத்தில் இன்று நாம் காணும் நிலை.

நம் மாகாண மக்களின் முக் கிய உணவுப்பொருள் அரிசி. இப்போது பங்கீட்டு முறைப் படி வயது வந்த மக்களுக்கு நாள் ஒன்றுக்கு எட்டு அவுன்ஸ் அரிசியும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு நான்கு அவு ன்ஸ் அரிசியும் கொடுக்கப்படுகி றது. இந்த அரிசி ஒருவாரத்தில் நான்கு நாட்களுக்குத் தான் போதியதாயிருக்கிறது. மற்ற மூன்று நாட்களுக்கு மக்கள் பட்டினியாய் இருப்பதா என்ற கேள்வி நம்மை அல்லும் பகலும் வாட்டுகிறது. வயது வந்தவர் கள் தினம் ஒருவேளை உண வோடு இருந்துவிட முடிவு செய்து விட்டால் எட்டு நாளுக் கும் அரிசி இருக்கும். ஆனால் குழந்தைகளை என்னசெய்வது? அவர்களை ஒருவேளை சோற் றோடு பட்டினி போட்டுவிட எந் தப் பெற்றோருக்காவது மனம் வருமா? மேலும் அந்தக் குழந் தைகள்தானே பிற்காலத்து இந் தியாவின் பிரஜைகள்? அவர்கள் இளவயதில் தக்க உணவின்றி, உடல் வலிமையை இழப்பார்க ளானால், உடல் வலியும், மனோ வலியும் உள்ள பிரஜைகள் அடுத்த தலைமுறையில் நம் நாட் டில் இருக்க முடியுமா?

மனித உடலுக்கு நாளொன்றுக்கு 2,500 "காலரிகள்" கொண்ட உயிர்ச்சத்து அவசியம். இந்த உயிர்ச்சத்து உண்ணும் உணவிலிருந்துதான் கிடைக்கிறது. இப்போது நமக்குக் கிடைக்கும் எட்டு அவுன்ஸ் அரிசியால் நமது உடலுக்கு நாளொன்றுக்கு 1,000 காலரி உயிர்ச்சத்துத்தான் கிடைக்குமென்று தெரிகிறது. இவ்வாறு ஆயிரம் காலரி சத்துள்ள உணவையுண்டு உயிர்வாழுமாறு மக்களிடம் கூறுவது மனிதத் தன்மைக்கே புறம்பான பெருங் கொடுமையென்று உணவு மந்திரி—அவர் ஒரு மருத்துவர்—ஒரு நாள் ஒரு சொற்பொழிவில் கூறினார். ஆகவே நம் மாகாணத்தில் உணவு நெருக்கடி எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பது எளிதில் விளங்குகிறது.

ராக்கேஷ் ப்ரொடக்ஷன்ஸ் தயாரித்திருக்கும் "ஸான்ஸிர்" என்னும் சமூகப் படத்தில் பல்வண்ட் சிங்கும், பீகம் பாராவும்.

இப்போது கிடைக்கும் எட்டு அவுன்ஸ் அரிசியாவது நிரந்தரமாகக் கிடைக்குமா, இல்லையா என்ற பயம் மக்கள் மனத்தைப் பற்றிக்கொண்டது. பட்டினியாயிருந்து உயிர்விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்று நினைக்கும்போதே மக்கள் பெருந்திகில் அடைகிறார்கள் இந்த திகிலினால் அவர்கள் கள்ள மார்க்கட்டில் அரிசியை வாங்கிப் பதுக்கிவைக்க முற்படுகிறார்கள். பட்டினியாயிருக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று மக்கள் உறுதியாக நம்புவார்களானால் அவர்கள் மனத்தைக் கௌவிக் கொண்டிருக்கும் பயம் நீங்கும். கள்ள மார்க்கட் விலையும் ஓரளவு இறங்கும். எட்டு அவுன்ஸ் ரேஷனைப் பனிரண்டு அவுன்ஸாக மாற்றினால் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்ட மக்கள் கள்ள மார்க்கட்டுக்கே போக மாட்டார்கள். ஆனால் இத்தகைய நம்பிக்கையை மக்களிடையில் ஏற்படுத்துவதற்கு நமது அரசாங்கம் முற்படவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் விடும் அறிக்கைகளால் மக்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள குழப்பமும் பயமும் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இரண்டே வழிகள்தான் இருக்கின்றன :—(1) பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது. (2) நம் மாகாணத்தில் உற்பத்தியைப் பெருக்குவது. வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருளை நம் மாகாணத்திற்கு நாமே நேராக வரவழைக்க முடியாது. வெளியிலிருந்து வரும் உணவுப் பொருள்களை மத்திய அரசாங்கம் மாகாண வாரியாகப் பங்கு போட்டுக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. இவ்வாறு பங்கு போட்டு நம் மாகாணத்திற்குக் கொடுக்கப்படும் அரிசி மிகக் குறைவாக இருக்கிறது. ஆளொன்றுக்கு நாளொன்றுக்கு அரை அவுன்ஸ் அரிசிகூட மத்திய அரசாங்கத்தின் உதவியால் நம் மாகாண அரசாங்கம் அடைய முடியவில்லை. ஆகவே, பிறர் உதவியை எதிர் பார்த்தால் நம் மாகாண மக்கள் பட்டினி கிடந்து மடிவார்கள். வங்காளப் பஞ்சத்தை விடக் கொடியதொரு பஞ்சம் நம் மாகாணத்தில் ஏற்படலாம். நம் மாகாணத்திலேயே நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்வதுதான் அறிவுடைமை.

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல இடையூறுகள் இருக்கின்றன என்பது உண்மைதான். உணவு மந்திரி மாத்திரமின்றிப் பிரதமர் உட்பட மற்ற மந்திரிகளும் அல்லும் பகலும் இதே வேலையாக இருந்தாலுங்கூட இந்த நெருக்கடியை எளிதில் தீர்த்துவிட முடியாது என்பதை நாம் அறிவோம். ஆகவே, நமது மந்திரிகளை நாம் வீணுகக் குறை கூறுவதால் பயன் ஏற்படாது; அது

நியாயமும் ஆகாது. இவ்வாறு அவர்களுக்குப் பொது மக்களாகிய நாம் அளித்திருக்கும் கடினமான வேலையில் அவர்கள் மீது நமக்கு அனுதாபம் ஏற்படுவது உண்மையாயினும், இந்த நெருக்கடியை அவர்கள் தீர்க்காமல் மக்கள் பட்டினி இருக்கவேண்டிய நிலைமை மாகாணத்தில் ஏற்பட்டு விட்டால், மந்திரிகளைப் பொது மக்கள் மன்னிக்க மாட்டார்கள். நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அவர்கள் எடுக்கும் நியாயமான நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் பொது மக்களுடைய பரிபூரணமான ஆதரவு அவர்களுக்கு இருக்கும். நெருக்கடி தீர்ந்து மக்கள் பட்டினியின் பயமில்லாமல் வாழ்வதற்கு அவர்கள் வழி கோலுவார்களானல் பொது மக்களின் நன்றியறிதலையும் வாழ்த்தையும் அவர்கள் பெறுவார்கள்.

மிராஸ்தார்களுக்கும் பண்ணையாட்களுக்கும் ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதம் இப்போது உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிக்குப் பெரிய இடையூருக இருக்கிறது. பண்ணையாட்கள் அதிகக் கூலி கேட்கிறுர்கள். குத்தகைக்குப் பயிர்செய்யும் குடியானவர்கள் மிராஸ்தார்களுக்கு இதுவரையில் கொடுத்து வந்ததைப்போல் விளைவின் பெரும் பகுதியைக் கொடுக்க மறுக்கிறுர்கள். இதனுல் மிராஸ்தார்களின் வரும்படி குறைகிறது. தங்கள் நிலங்கள் சிலவற்றைச் சாகுபடி செய்யாமல் விட்டு விடவும் மிராஸ்தார்கள் தீர்மானம் செய்து விடுகிறுர்கள். இன்றேல் வெளியூர்களிலிருந்து பண்ணையாட்களைக் கொண்டு வந்து பயிர்த்தொழில் செய்ய முயற்சி செய்கிறுர்கள். இதனுல் பண்ணையாட்களுக்கு மனக்கசப்பு ஏற்படுகிறது. தஞ்சாவூரிலும், திருநெல்வேலியிலும், மதுரையிலும் குடியானவர்களிடையே குழப்பமும் கலகமும் ஏற்பட்டது நமக்குத் தெரிந்ததே. இனிமேல் இவ்விதம் ஏற்படாமலிருப்பதற்கு அரசாங்கம் வழி தேடவேண்டும். மிராஸ்தார்களும், தற்கால நிலையை அறிந்து குடியானவர்கள் மீது அனுதாபங் காட்டி அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டும். குடியானவர்கள் நாட்டின் நன்மையை உத்தேசித்துத் தங்கள் கோரிக்கைகள் நியாயமானவைதாஞ என்று ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இரு திறத்தார்களும் பொது மக்களின் நன்மையை உத்தேசித்துத் தங்களுக்குள் சமரச மனப்பான்மையை மேற்கொண்டொழுகி உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டும். பயிர்த்தொழிலுக்குப் பயன்படக்கூடிய நிலத்தில் ஒரு காணி நிலமுங் கூடத் தரிசாக விடப்படவில்லை என்ற நிலை மாகாணத்தில் ஏற்படவேண்டும்.

அரிசியின் விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

அந்த விலை மிகக் குறைவாயிருக்கிறது என்பது விவசாயிகளின் கருத்து. பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகளின் விலை மிக உயர்ந்து விட்டது. அத்தொழிலுக்கு இன்றியமையாத மாடுகளின் விலை ஒன்றுக்கு நான்காக இருக்கிறது. மாட்டுத் தீனியின் விலை உயர்ந்து விட்டது. வேண்டிய அளவு உரம் கிடைப்பதில்லை. மேலும், குடியானவன் வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்துவிட்டது. பண்ணையாட்களின் கூலியும் உயர்ந்து விட்டது. இந்த நிலையில் அரிசியின் விலையை அரசாங்கம் உயர்த்தா விட்டால்குடியானவர்களுக்கு லாபம் இல்லாமற்போவதோடு அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களை வாங்குவதற்கும் அவர்களுக்குப் போதுமான பணம் இல்லாமற் போகிறது. ஆகவே, கொள் முதல் கணக்குப்படி கொடுக்க வேண்டிய அளவு தானியத்தை அவர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்காமல்,உணவுப்பொருள்களைக் கள்ள மார்க்கட்டிற்கு அனுப்பி விற்க முயற்சி செய்கிறார்கள். அரிசியின் விலையை உயர்த்தினால் மற்றப் பொருள்களின் விலையும் உயர்ந்து விடும் என்று சிலர் கூறி, அரிசி விலையை ஏற்றக்கூடாது என்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது அரிசியின் விலையை உயர்த்திய பின்னர்தான் தெரியும். இது மாத்திரமின்றி, அரிசியின் விலையை உயர்த்தி நம் மாகாணக் குடியானவர்களுக்கு உதவிசெய்யலாம் என்றால், மத்திய அரசாங்கம் ஒப்புக்கொள்வதில்லை. ஸயாமிலிருந்து இறக்குமதியாகும் அரிசிக்கு நம் மாகாணத்தில் விளையும் அரிசிக்குக் கொடுக்கும் விலையை விட ஒன்றரைப்பங்கு விலை கொடுப்பதற்கு மத்திய அரசாங்கம் தயங்கவில்லை. இந்த நிலையில், நம் மாகாணத்திற்கு வேண்டிய அளவு உணவுப்பொருள் கொடுக்க முடியாத மத்திய அரசாங்கத்தின் உத்தரவுக் கடங்கி அரிசியின் விலையை ஏற்றாமலிருந்தால் நம் மாகாண விவசாயிகள் உணவுப் பொருள் உற்பத்தியில் தீவிரமாக இறங்கமாட்டார்கள். அரிசிக்குப் பதிலாக மணிலாக்கொட்டை, கரும்பு, பருத்தி போன்ற பொருள்களைப் பயிர் செய்ய முற்படுவார்கள்.

இப்போது போனஸ் என்ற முறையிற் கொடுக்கும் பணத்தை அரிசியின் விலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் செலவு செய்தால் விவசாயிகளுக்கு ஓரளவு திருப்தி ஏற்படும். மேலும், அரசாங்கம் வரியைப் பணமாக வாங்குவதற்குப் பதிலாக தானியமாக வாங்கிக் கொள்ளலாம். இதனால் அரசாங்க அதிகாரிகளுக்கு வேலை குறைவதோடு விவசாயிகளுக்கும் உதவியாயிருக்கும். விவசாயிகளுக்கு இன்னும் பலவகையில் அரசாங்கம் உதவி செய்யலாம். அவர்களுக்கு வேண்டிய

உரமும் இரும்புச் சாமான்களும் சீக்கிரமாகவும், குறைந்த விலையிலும் கிடைக்க ஏற்பாடு செய்யலாம். மதுவிலக்கினால் கோடிக் கணக்கான ரூபாய்களை இழப்பதற்குத் தயாராயிருக்கும் அரசாங்கம் நிலவரியில் நான்கில் ஒரு பங்கைத் தள்ளி விட்டதாக விவசாயிகளுக்கு அறிவித்து அவர்களுக்கு உற்சாக மூட்டினால் அவர்கள் பயிர்த் தொழிலில் தீவிரமாக ஈடுபடுவார்கள். மதுவிலக்கினால் பணத்தை இழப்பதோடு, அத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கும் ஏராளமான பணத்தைச் செலவு செய்யத் தயாராயிருக்கும் அரசாங்கம் மக்களைப் பஞ்சத்தினின்று காப்பாற்றுவதற்குச் சிறிது வருவாயை இழப்பதனால் குடி முழுகிப் போகாது. பணம் வேண்டுமானால் வேறெந்த விதத்திலாவது அரசாங்கம் வசூலித்துக் கொள்ளட்டும். பொதுமக்கள் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று உறுதி கூறலாம்.

இவ்வாறு பல வழிகளிலும் குடியானவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்தால் உணவுப் பொருள் உற்பத்தி பெருகும். குடியானவர்கள் பெரும்பாலும் தானியத்தைக் கள்ள மார்க்கட்டுக்கு அனுப்ப மாட்டார்கள். அப்படி யாராவது தானியத்தைப் பதுக்கி வைப்பதாகத் தெரிந்தால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் வீடுகளைச் சோதனை செய்து, போலீஸ் உதவியால் அவர்கள் பதுக்கி வைத்திருக்கும் தானியத்தைப் பறிமுதல் செய்வதைப் பற்றி யாதோர் ஆட்சேபனையும் இருக்க முடியாது. தனி மனிதனின் சுதந்திரம் அதனால் பறி போகிறது என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம். மக்கள் பட்டினியால் வாடும்போது தானியத்தை மறைத்து வைத்திருப்பவனைத் தண்டிப்பது நியாயமான காரியந்தான். ஏனென்றால் அவன் முதல் நம்பர் சமூகக் குற்றவாளியாவான்.

ஆனால், கொள்முதல் வேலையில் ஈடுபடும் உத்தியோகஸ்தர்களும் அவர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்படும் போலீஸ் அதிகாரிகளும் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்பவர்களாகவும், தாங்கள் பொது மக்களின் ஊழியர்கள் என்று உண்மையில் நினைப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுடைய அக்கிரமச் செயல்களால் கொள்முதல் திட்டம் வெற்றி பெறாமற் போவதோடு அரசாங்கத்திற்கும் கெட்டபேர் ஏற்படும். லஞ்சம் வாங்குபவர்களுக்கும், தங்கள் அதிகாரத்தை அநியாய முறையில் உபயோகிப்பவர்களுக்கும் தண்டனை அளிக்க வேண்டும்.

இவ்வாறு தானிய உற்பத்தியைப் பெருக்குவதோடு அரசாங்கம் நின்று விடக்கூடாது.

(இதன் தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க.)

போ! போ! மேற்கே போ!

(கொழும்பு ஸ்ரீ கே. வீ. எஸ். வாஸ், எம்.ஏ.)

இந்தியப் பட முதலாளிகளும், டெக்னீஷியன்களும், டைரக்டர்களும் மேல் நாடுகளுக்குச் செல்லுவதையும் அங்கிருந்து அறிக்கைகளை விடுவதையும் அடிக்கடி பத்திரிகைகளில் நாம் படிக்கிறோம். மேல்நாட்டு சினிமாத் தொழிலின் நுட்பங்களை ஆராய்ந்தறிய வேண்டுமென்ற ஆவல் இந்தியப் பட முதலாளிகளுக்குக் கொஞ்ச காலமாக ஏற்பட்டிருப்பது இந்தியப் படத் தொழிலின் நல்ல காலத்திற்குத்தான். மேல் நாட்டுப் படங்கள் கீழ்த் தேசக் கலாசாரத்துக்கு முரண்பட்டவைகளாயிருக்கலாம். நம்மவர்களின் ஆத்மீக உணர்ச்சிக்கு அதிர்ச்சியை விளைவிக்கும் அம்சங்கள் நிரம்பியவைகளாகவுமிருக்கலாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து கலப்பு நடனம் செய்வதை நிஜ வாழ்க்கையிலோ அல்லது நாடகமேடைகளிலோ கூட நாம் அனுமதிக்கத் தயாரில்லை. முத்தமிடும் காட்சிகளும் அப்படியே. மேல் நாட்டவர்களின் நடையுடைப் பழக்க வழக்கங்கள்கூட நம்மவர்களுக்குச் சிற்சில சந்தர்ப்பங்களில் அருவெறுப்பைக் கொடுக்கின்றன. எனவே, மேல்நாட்டவர்கள் தங்களுடைய வாழ்க்கையை அனுசரித்து, அன்றாடப் பழக்கவழக்கங்களைப் பிரதிபலிக்கும்படி எடுக்கும் படங்கள் அந்தக் கலாசாரத்தை விரும்பாத இந்திய மகாஜனங்களுக்கு அர்த்தமற்றவைகளாகவும் ஆபாசக் குப்பைகளாகவும் தோன்றுவது இயற்கை. இந்த வெறுப்பு படப்பிடிப்பு நுட்பங்களிலே மேல் நாட்டவர்கள் அடைந்திருக்கும் அபாரமான முன்னேற்றத்தை நமது திருஷ்டியிலிருந்து மறைத்து விடக்கூடாது. விஞ்ஞான வளர்ச்சியைப் படப் பிடிப்பிற்குப் பயன்படுத்தும் நுண்ணறிவில் மேல் நாட்டவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொண்டிருப்பது கைம்மண்ணளவு. கல்லாதது மலையளவு இருக்கின்றது. இந்த நிலைமையில் இந்தியப் படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மேல் நாட்டு ஸ்டுடியோக்களுக்கு விஜயம் செய்து அங்கு கையாளும் முறைகளை ஆராய்ந்து அறிந்து வருவது பலவகையிலும் நன்மை புரிவதாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

படப்பிடிப்பின் சாஸ்திரீய நுட்பங்களை அறிய வேண்டிய அவசியம் முன்னதைவிடப் பன்மடங்கு அதிகமிருக்கிறது இந்தியாவுக்கு இப்பொழுது. இதுவரை இந்தியா தனது சொந்தத் தேவைக்கும் இலங்கை, பர்மா,

மலாயா போன்ற அண்டை நாடுகளின் தேவைக்கும் வேண்டிய அளவு படங்களையே தயாரித்து வந்தது. இவ்வித நிலைமை நீடிப்பதை இந்தியா இனி அனுமதிப்பதற்கில்லை. அனுமதிக்கவும் கூடாது. மேல்நாட்டுப் படங்களைக் கீழ்நாடுகளில் காண்பிப்பதைப்போல இந்தியப் படங்களையும் மேல் நாடுகளில் காண்பிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தும் காலமும், மேல் நாட்டு மார்க்கெட்டுகளுக்குப் பொருத்தமான படக் காட்சிகளை இந்தியா உற்பத்தியாக்க வேண்டிய காலமும் இப்பொழுது வந்துவிட்டது.

கண்ணாம்பா தேவி சந்திரசேகர் படத்தில பாடியும் நடித்துமிருக்கிறார்.

கிஸ்மத், ராம்ராஜ்யா, சகுந்தலா, டாக்டர் கோட்னிஸ் போன்ற சில படங்கள் மேல் நாடுகளில் காண்பிக்கப்பட்டிருப்பது உண்மைதான். சென்ற மாதம் வெனிஸ் நகரத்தில் நடந்த சர்வதேச சினிமாப்படக் காட்சியில் ஜெமினி மங்கம்மாவும் வாஹினியின் ஸ்வர்க்க ஸீமாவும் காண்பிக்கப்பட்டன. ஆயினும் கண்காட்சிகளில் ஏதோ ஒரு விசித்திரப் பொருளைக் காட்டுவது போன்ற நிலைமையில்தான் இவை மேல்நாடுகளில் காண்பிக்கப்பட்டுள்ளனவே தவிர வர்த்தக தோரணையிலல்ல. சமீபத்தில் இங்கிலாந்து சென்றிருந்த மிஸ்டர் எஸ்ரா மீர் என்ற வட இந்தியப் பட முதலாளி லண்டனில் ஒரு பேட்டியளித்துப் பேசிய பொழுது மேல் நாடுகளில் காட்டப்படுவதற்காக இந்தியப் படங்களைத் தயாரிக்கவேண்டியகாலம் இப்பொழுது வந்துவிட்டதென்றும், ஆங்கிலத்தின் மூலமாக இந்தியாவையும், இந்தியாவின் மூலமாகக் கீழ்திசை முழுவதையுமே மேல் நாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் பணியை இந்தியப் பட முதலாளிகள் சிறப்பாகச் செய்யவேண்டுமென்றும் கூறினர்.

ஆங்கிலத்தின் மூலமாக இந்தியாவை மேல்நாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று மிஸ்டர் எஸ்ரா மீர் சொல்லியதில் ஒரு விசேஷமிருக்கிறது. இந்தியப் படங்

களை இந்திய பாஷைகளி லேயே மேல் நாடுகளில் காண்பிப்பது விரும்பத் தகுந்ததோ அல்லது லாப கரமானதோ இரண்டு மில்லை. பாஷை விளங்காத படத்தைப் பார்க்கப் பொதுவாக எவரும் விரும்ப மாட்டார்கள். அப்படி யே ஒரு சிலர் பார்க்கவந் தாலும் விளங்காத பாஷை இந்திய கலாசாரத்தைப் பற்றி மேல் நாட்டவர்களி டம் தப்பு அபிப்பிராயங் களை உண்டுபண்ணுவதா யிருக்கும். லாபமும் இல் லாமல் விபரீத பலன்களை யும் கட்டிக்கொள்ளுவா னேன்?

உலகநாடுகளின் கவனத் தைக் கவரக்கூடிய எண் ணித் தொலையாத சம்ப வங்கள் நம்நாட்டுச் சரித் திரங்களில் மலிந்து கிடக்கின் றன. வடநாட்டு "மஹால்" களும் தென்னாட்டுக் கோயில் களும் ஒவ்வொன்றும் ஒரு அற் புதக் கதை சொல்லும். வீரத் துக்கும் தியாகத்துக்கும் தலை சிறந்த எவ்வளவோ மன்னர் களைப் பார்த்திருக்கிறது பாரத நாடு. இலங்கை, இந்தியா, பர்மா, மலாயா முதலான கீழ் நாடுகளின் தேச சரித்திரங் களையே உண்மையான அடிப் படையில் மேல் நாட்டவர்கள் அறியமாட்டார்கள். இவை களை யெல்லாம் ஆராய்ந்து, திருவியெடுத்து இந்தியர்கள்

'எட்டு நாள்' என்ற படத்தில் வீரா அபாரமாக நடிக்கிறார்.

மட்டுமல்ல, வெளிநாட்டவர்க ளும் ரஸிக்கத் தகுந்த முறை யில் நாம் படங்களாகத் தயாரிக் கலாம். அவை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அதிகச் செல் வாக்கு பெறுவதும் நிச்சயம்.

மேல் நாடுகளுக்கென்று தயா ரிக்கும் படங்களை ஆங்கிலத்தி லேயே எடுப்பது விரும்பத் தகுந்ததென்று சிலர் கருதக் கூடும். ஆனால் இதில் அனே கம் சங்கடங்களிருக்கின்றன. இந்திய நடிகர் நடிகைகளில் ஆங் கிலம் தெரிந்தவர்கள் மிகமிகச் சொற்பம். காலேஜ் படிப்புப் படித்தவர்களிலும் "பேசும்



A
NATIONAL INDUSTRY
TO THE FORE..
Hind Cycles factory—the largest in India—solves the nation's transport problems. To meet the peculiar conditions prevailing in India, Hind Cycles are provided with reinforced forks and frames.
HIND-INDIA'S OWN
MANUFACTURED BY HIND CYCLES LTD.
HC. 25

ஆங்கிலம்" அறிந்தவர்கள் அனேகமாக ஒருவர்கூட இருக்க மாட்டார்களென்று சொல்லிவிடலாம். சினிமாப் படங்களுக்கு உபயோகிக்கும் பாஷைக்கும் புத்தகத்தில் படிக்கும் இலக்கண மொழிக்கும் மிக அதிகமான வித்தியாசமுண்டு. பெயர்ச் சொல், வினைச் சொல், எல்லாம் வைத்து இலக்கண சுத்தமான தனித் தமிழை நமது தமிழ்ப் படங்களில் உபயோகித்தால் அதை யாராவது ரசிப்பார்களா? அது எவ்வளவு கோரமாயிருக்கும்! சினிமாப் படங்களைப் பேசும் படமென்கிறோமே தவிர எழுதும்படமென்று சொல்லுவதில்லையே!

நெப்டியூன் ஸ்டுடியோவில் 'மகாபலி' வேகமாகத் தயாராகிறது. அதில் உள்ளத்தையள்ளும் ஒரு காட்சி.

தினசரி வாழ்க்கையில் சர்வ சகஜமாக சம்பாஷணைக்கு உபயோகிக்கும் தமிழையே படங்களில் நாம் விரும்புகிறோம். அதற்கு மாறான வசனம் இயற்கைக்குப் பொருத்தமில்லாமலும் கோரமாகவும் நமக்கு தொனிக்கின்றது. அதே போலத்தான் ஆங்கிலம் பேசும் மேல் நாட்டவர்களுக்கு ஆங்கிலத்திலேயே நாம் தயாரிக்கும் படங்களில் காலேஜ் புத்தக ஆங்கிலத்தை உபயோகித்தால் அது கேலிக்குத்தான் இடமளிப்பதாயிருக்கும்.

பேசும் தமிழில் "அடே!" "என்னடா?" "அடிச்சிடுவியோ ஒங்கப்பன் மவனே சிங்கம்டா" என்பதுபோன்ற எத்தனையோ நயச் சொற்களிருக்கின்றன. அவற்றைத் தமிழ் மொழியை அறியாதவர்களால் ரஸிக்கவோ அல்லது பிரயோகிக்கவோ முடியாது. புத்தகங்களை வைத்துக் கொண்டு தமிழ் பாஷையைக் கற்ற தமிழரல்லாதவர்களுக்கு இவ்விதக் கொச்சைத் தமிழ் ஏதோ ஒரு புதிய பாஷையைப் போலவும் தொனிக்கும். ஆனால் தமிழர்கள், அன்றாட வாழ்க்கையிலே தமிழை உபயோகிப்பவர்கள் இதை எவ்வளவு ரஸிக்கிறார்கள்?

தமிழைப்போலவே ஒவ்வொரு பாஷையிலும் சில நயச் சொற்களிருக்கின்றன. அவற்றை அந்த பாஷையை தினசரி வாழ்க்கையில் உபயோகிப்பவர்களால்தான் ரஸிக்கவும் பிரயோகிக்கவும் முடியும். ஆங்கில பாஷா நாடுகளுக்குப் படங்

களைத் தயாரிக்கும் இந்தியப் பட முதலாளிகள் இந்த முக்கியமான விஷயத்தை மறந்து விடக் கூடாது. பாஷா சங்கடத்தைப் போக்கக் கீழ்த்தேச பாஷை களிலே முதலில் படமெடுத்து, பிறகு ஆங்கிலேயர்களையோ அல்லது அமெரிக்கர்களையோ கொண்டு ஆங்கில மொழி பதிப் பிக்கச் செய்வது ஒரு நல்ல யோசனை. மொழி பதிப்பிக் கும் பொழுது சப்தமும் உதடு அசைவதும் பொருந்தும்படி கவனித்துக் கொள்வதில் சர்வ ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இந்தியப் படங்களை ஆங்கிலப் படுத்திவிட்டால் மட்டும் நமது படங்களுக்கு மேல் நாடுகளில் கிராக்கி யேற்பட்டு விடாது. படப்பிடிப்பு நுட்பங்களில் மேல் நாட்டவர்கள் வாயுவேகத் தில் முன்னேற்ற மடைந்து கொண்டிருக்கும் பொழுது நமது படங்கள் ஓரளவாவது அந்த அபிவிருத்திகளை அனுச ரித்தனவாயிருக்க வேண்டும். நமது படமுதலாளிகளும் டைரக்டர்களும் டெக்னீஷியன் களும் மேல் நாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாட்டவர்கள் அனுஷ்டிக்கும் படப்பிடிப்பு முறைகளில் நல்ல பயிற்சி பெற்று வரவேண்டும். இதற்காக "போ! போ! மேற்கே போ!" என்று கற்றறியும் ஆற்றல் மிகுந்த நமது வாலிப டைரக்டர்களையும் டெக் னீஷியன்களையும் தூண்டுவது தவறுகாது.

(26-ஆம் பக்கம் தொடர்ச்சி)

காய்கறித் தோட்டங்களை எங் கெங்கு ஏற்படுத்த முடியுமோ, அங்கெல்லாம் ஏற்படுத்துவதற் கும், கோழிகளை வளர்த்து முட் டையின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அரசாங்கத் தார் உதவியும் பிரசாரமும் செய்யவேண்டும். மேலும் மீன் பிடிக்கும் தொழிலுக்கு அர சாங்க ஆதரவு அளித்து, பிடிக் கப்பட்ட மீன்கள் கெட்டுப் போகாமல் வேற்றூர்களுக்கு அனுப்புவதற்கு அவற்றைப் பக் குவப்படுத்தும் நிலையங்களை ஏற் படுத்தி, மீனின் விலையைக் குறைத்து, அதைப் புசிப்பவர் களுக்கெல்லாம் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

இது மாதிரியே பல வகைகளி லும் அரசாங்கம் உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய நீண்ட காலத் திட்டத்தையும், குறுகிய காலத் திட்டத்தையும் பற்றிச் சிந்தனை செய்யவேண் டும். எப்படியாவது உணவு நெருக்கடியைத் தீர்த்து மக்கள் மனத்தில் தற்போதிருக்கும் பயத்தை அகற்றினுல் அரசாங் கத்திற்கு மக்களுடைய ஆதரவு அபரிமிதமாகக் கிடைக்கும். இன்றேல் ....

குறள் கூத்து

(கபிலன்)

காட்சி 1.

இடம் :—நூல் கடை (முன் பக்கம் கடை, பின்பக்கம் வீடு).

பாத்திரங்கள் :— நூல் கடைக்காரன் —தங்கை மகன் கிருஷ்ணன் —மகள் மதுரம்.

(நூல் கடைக்காரன் ஒரு புத்தகத்தைப்பார்த்துக் கொண்டிருக்கிறான். கிருஷ்ணன் வருகிறான்).

மாமா :— வாப்பா! கிருஷ்ணு! நீ இல்லாத இடம் இருள்மூடி இருந்தது.

கி-ன் :—நான் இருந்த இடமும் இருள்மூடித்தான் இருந்தது மாமா!

மாமா :—எங்கே, நீ வந்ததுமுதல் உன்னே இந்தப் பக்கத்திலியே, பாக்க முடியலியே?

கி-ன் :—அதை யேங்கேக்கிறிங்க!

மாமா :—என்! என்னப்பா விஷயம்?

கி-ன்:—வந்ததிலே இருந்து,பைத்தியம் பிடிச்சாப்பலே இருக்குது.

மாமா:—(ஆச்சரியத்தோடு) என்ன! பைத்தியம் பிடிச்சாப்லே இருக்குதா?

கி-ன் :—ஆமா மாமா! ஆமா! பைத்தியமேதான்!

மாமா :—நீயா! எத்தனேயோ பேரை நீ பைத்தியக்காரனுக்கிடுவியே!

கி-ன் :—அது சரி! வூட்லே... மதுரம், மத்த பேரெல்லாம் சுகந்தானே?

மாமா :—உன் புண்ணியத்திலே எல்லாரும் சௌக்கியந்தான்.

கி-ன் :—என் புண்ணியம் இல்லே மாமா. எல்லாம் கடவுள் செயல்.

மாமா :—ஆமா ஆமா. அதுவுஞ் சரிதான்.

கி-ன் :—அது என்ன புத்தகம் மாமா?

மாமா :—ஒண்ணுமில்லே. திருக்குறள்.

கி-ன் :—குறளா! எங்கே இப்படிக் கொஞ்சம் கொடுங்க பாப்போம்.

மாமா :—இந்தா! அந்தப் பக்கம் மாறாமே பாரு.

(மாமா கொடுக்கிறான். கிருஷ்ணன் வாங்கிப் படிக்கிறான்).

"செல்லிடத்துக் காப்பான் சினங்
காப்பான்
அல்லிடத்துக்காக்கிலென் காவாக்கா
லென்?"

கி-ன் :—இந்தப்பாட்டுக்கு என்ன அர்த்தம் மாமா?

(ஜன்னல் வழியாக "களுக்" என்று சிரிப்புச் சத்தம் கேட்கிறது. இருவரும் திரும்பிப் பார்க்கிறார்கள்).

மாமா :—இது தெரியலியா உனக்கு?

கி-ன் :—ஆமா மாமா! புரியலே.

மாமா :—"தன் கோபம் பலிக்கும் இடத்தில் செல்லவிடாமல் தடுப்பவனே அருளால் தடுப்பானுவான்." என்று பொருள்.

கி-ன் :—இதுதான் புரியலே.

மாமா :—இதோ பார்! தம்பி! என் மகள் மதுரம் இருக்குதில்லே!

கி-ன் :—ஆமா!...உள்ளே இருந்து சிரிக்கிது!

மாமா :—அதைச் சொல்லல்லே! இந்தாபார்! மதுரம் என் மகள் என்னும் முறையிலே, நான் அதை கோவிச்சிக்கலாம், வையலாம், அடிக்கலாம், என்ன வேணும்னாலும் செய்யலாம், இல்லையா?

கி-ன் :—ஆமா! ஆமா!!

மாமா :—ஆனால் நான் அப்படிச் செய்யக்கூடாது. இப்போ நம்ம கிராம முன்சீப் இருக்காரு அவருகிட்டே நான் கோவிச்சிக்கமுடியுமா?

கி-ன் :—கோவிச்சிக்கிட்டா குடியைக் கெடுத்திடுவாரு.

மாமா :—இந்தமாதிரி சந்தர்ப்பங்களுக்குத்தான் இந்தப் பாட்டு.

கி-ன் :—அப்படின்னா நீங்க நம்ம மதுரத்துக்கிட்டே கோவிச்சிக்க மாட்டிங்களா?

மாமா .—குறள் படிக்கும்போது கோபம் வருமா?

கி-ன் :—மதுரம் என்ன செய்தாலும் கோபம் உங்களுக்கு வராதே?

மாமா :—வரவே வராது! படிக்கிறது, அதன்படி நடக்கிறத்துக்குத் தானே.

கி-ன் :—அது சரி! என் மேலே கோவிச்சிக்கிவிங்களா?

மாமா :—உன்மேலேயும் கோவிச்சிக்கமாட்டேன்.

கி-ன் :—சரி மாமா! நான் வந்து ரொம்ப நாழியாச்சி. ஒரு சிட்டம் பட்டு நூல் கொண்டுவாங்க.

(மாமா உள்ளே போய் பட்டு நூல் கொண்டு வருகிறான். கிருஷ்ணன் யோசனை செய்கிறான்).

மாமா :—என்னப்பா யோசிக்கிறே?

கி-ன் :—ஒண்ணுமில்லே! பட்டு நூலு, அரைச் சிட்டம் போதும்னு நினைக்கிறேன்.

மாமா :—இதுதானே! பிரிச்சி எண்ணியேத் தாரேன்.

(ஒரு மடியைப் பிரித்து அரைமடியாகத் தருகிறான். வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய்த் திரும்புகிறான்).

மாமா .—என்னப்பா! ஏன் திரும்பிட்டே?

கி-ன் :—ஒண்ணுமில்லே. கொஞ்சம் பணம் செலவுக்குப் போரலே. அதனாலே, கால் சிட்டம் நூலு போதும்னு நினைக்கிறேன். உங்களுக்குக் கஷ்டம் கொடுக்கணுமேன்னு யோசிக்கிறேன்.

மாமா:—ஒண்ணும் யோசிக்காதே. அதைவிட எனக்கு என்ன வேலே?

(அரை மடியைப் பிரித்துக் கால் மடி பட்டு நூலும் பாக்கிப் பணமும் கொடுத்து)

மாமா :—போதுமா?

கி-ன் :—போதும் மாமா. மன்னிக்கணும் நான் வர்ரேன்.

(கிருஷ்ணன் போகிறான். மதுரம் வெளியே வருகிறாள். மறுபடியும் கிருஷ்ணன் திரும்பி வருகிறான். மதுரம் உள்ளே ஓடிவிடுகிறாள்).

மாமா :—என்ன தம்பி! ஏன் மறுபடியும் திரும்பிட்டே?

கி-ன் :—(துக்கத்தோடு) இல்லே மாமா! இந்தக் கால் சிட்டம் பட்டையும் எடுத்துக்கிட்டு கோவிச்சிக்காமே பணத்தைக் கொடுத்திட்டிங்கன்னா தேவலே! பணம் செலவுக்குப் போரலே!

மாமா :—இதுதானே! வியாபாரத்திலேயும் கோவம் வரக்கூடாது. சரி! பட்டைக் கொடு.

(பட்டை வாங்கிக்கொண்டு பூராப் பணத்தையும் கொடுத்து)

மாமா :—இந்தா போதுமா? போய் வா.

கி-ன் :—ஆஹா! உங்க பெருமையும், பொறுமையும் யாருக்கு வரும் மாமா ?

(ஓர்ஆள் வெளியிலிருந்து வருகிறான்)

ஆள் :—கடக்காரய்யா! உங்களே நாட்டாமேக்காரய்யா, கையோட அழைச்சிக்கிட்டு வரச்சொல்றாருங்க.

மாமா :—தம்பி! ஒரு சின்ன உபகாரம் பண்றியா ?

கி-ன் :—என்ன மாமா ?

மாமா :—நாட்டாமேக்காரரு கூப்பிடுறாராம். போய்க் கேட்டுட்டு வரணும். கொஞ்சம் கடையைப் பாத்துக்கிறியா ?

(ஜன்னல் வழியாக மதுரம் எப்படிப் பார்க்கிறாள். அவளைக் கவனித்து விடுகிறான் கிருஷ்ணன்).

கி-ன் :—அதுக்கென்ன! பாத்துக்கிறேன். போய்ட்டு சீக்கிரம் வந்திடுங்க.

(மாமாவும் வந்த ஆளும் போகிறார்கள்).

கி-ன் :—மதுரம்! கொஞ்சம் தண்ணி கொண்டுவாயேன்.

(மதுரம் ஒரு டம்ளரில் தண்ணீரைக் கொண்டுவந்து வாயிற்படிக்கு வெளியில் வைத்துவிட்டு மறைவாக நிற்கிறாள்).

கி-ன் :—இங்கே பாரேன்! மதுரம்! உன்னைத்தானே!

(உள்ளே மெதுவாகப் போகிறான். மதுரம் பயந்து நடுங்குகிறாள். தவிக்கிறாள்).

கி-ன் :—ஆமா! உனக்கு என்கிட்டக்கூட வெட்கமா ?

மதுரம் :—(நாணத்தோடு) ஐயய்யோ! ஒருத்தரும் இல்லாதப்போ உள்ளே வந்திட்டிங்களே? யாரேனும் பார்த்தா என்னசொல்லுவாங்க?

கி-ன் :—சொல்றது என்ன! அத்தே மகனும் மாமன் மகளும் மனமொத்துப் போய்ட்டா ... இதிலே யாரு குத்தஞ் சொல்லமுடியும் ?

ம :—நீங்க, பைத்தியம்னு சொன்னது, சரிதான்.

கி-ன் :—ஆமா. நானொரு பைத்தியந்தான்.

(இருவரும் பாடுகிறார்கள்).

பாட்டு

காலுக்குச் செருப்பும் இல்லே—
என்ற மெட்டு

கி-ன் :—

பெண்ணாலே ஆண்களுக்குப் பிடிப்பதும் பைத்தியந்தான்
மண்ணாலே மன்னவரும்-கண்ணாட்டி-மடிவதும் பைத்தியந்தான்

ம-ம் :—

பைத்தியம் என்று சொல்லிப்
பல்லே இளிக்கிறியே
பைத்தியம் தெளிய ஒரு - அத்
தானே - வைத்தியம் செய்து
கொள்ளேன்.

கி-ன் :—

உன்னை நான் அடைவதுதான்
உற்றதோர் வைத்தியமே
என்னை நீ பார்ப்பதுதான் - கண்
ணாட்டி - என்னுடைய புண்
ணியமே.

ம-ம் :—

புண்ணியமும் பாவமுந்தான் புரு
ஷருக் கேதிங்கே
அன்னிய பெண்ணின்மேல் - அத்
தானே - ஆசை நீ வைக்கலாமா ?

(மதுரத்தின் சமீபத்தில்போகிறான்)

ம-ம் :—ஐயய்யோ! கிட்டே வராதிங்களேன். அப்பா வந்திடுமே! எட்டிப் போய்டுங்களேன்.

கி-ன் :—அப்பா வந்தா என்ன ?

ம-ம் :—கோவிச்சுக்குமே.

கி-ன் :—அப்பாதான் "குறள்" படிக்கிறாரே! கோவம் வராதே! இப்பத்தான் நான் பரிட்சை பண்ணிப் பாத்திட்டேனே. நீ ஒண்ணும் பயப்படாதே!

(கிட்டே நெருங்குகிறான்)

ம-ம் :—(நாணத்தோடு) கிட்டே வராதிங்க!...

கி-ன் :—சரி! எட்டி நிக்கிறேன். என்னே நீ கட்டிக்கிறேன்னு சொல்லு.

ம-ம் :—நீங்க வெளியே போனத் தான் நான் சொல்லுவேன்.

கி-ன் :—வெளியே போகச் சொல்லிக் கதவை சாத்திடலாம்னு நினைக்கிறியா! அது தான் முடியாது.

(கையைப் பிடிக்கிறான். பயத்துடன் திமிருகிறாள். மாமா வருகிறான். மதுரம் ஓடிவிடுகிறாள். கிருஷ்ணன் விழிக்கிறான்).

மாமா :—தம்பி! இது நல்ல வேலை தான்!

கி-ன் :—(கலவரத்தோடு) இல்லே மாமா!... வந்து ... இல்லே!... தாக மாக ... அது ... வந்து ... போய் ... (உளறுகிறான்).

மாமா:—என்டா! இதுக்குத்தான் நாட்டாமெக்காரரு கூப்பிடுறாருன்னு ஆளேச்சரிக்கட்டி அனுப்புனியோ? (ஒரு கம்பாலே இரண்டு பூசை போடுகிறான்.)

கி-ன்:—(அழுதுகொண்டு) மாமா! அடிக்காதிங்க! கோவம் வரப்படாதிங்க! குறளுக்கு விரோதங்க.

மாமா:—குறளுக்கு விரோதமல்ல —சாதகந்தான்.

(மறுபடியும் இரண்டு போடுகிறான்).

கி-ன்:—(அழுது கொண்டு) ஐயோ! அடிக்காதிங்களே. கோவம் வராத லட்சணமா இது? படிக்கிறது "குறள்" அடிக்கிறது மிலாறினலியா?

மாமா :—படித்தபடிதான் செய்தேண்டா.

கி-ன் :—(அழுதுகொண்டு) இப்படிக் கொலே வாங்கும்படியா "குறளே" சொல்லி இருக்கு?

மாமா :—சொல்லி இருக்கிடா.

கி-ன் :—(அழுது கொண்டு) எங்கே?

மாமா :—"மானம்" என்னும் அதிகாரத்தைப் பார்.

கி-ன் :—அம்மாக்கிட்டே போய் சொல்லி என்ன செய்கிறேன் பார். (அழுதுகொண்டே போகிறான்).

மாமா :—(கோபத்தோடு) மதுரம்! அவனைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்கு இஷ்டந்தானே?

ம-ம் :—என்னப்பா அப்படி கேக்கிறிங்க?

மாமா :—இவ்வளவு தூரம் நடந்த பிறகு, விஷயம் வெளியே தெரிக்தால் வேறு யாரேனும் உன்னைக் கல்யாணம் செய்துகொள்வாஞ?

ம-ம் :—அதுக்காக......?

மாமா :—உன்னை அவனுக்கே கட்டித் தொலைக்க வேண்டியதுதான்.

ம-ம் :—என்னப்பா!......(இழுத்துக்கொண்டே போகிறாள்).

(திரைவிழுதல்)

வசன கர்த்தா

(வலம்புரி. சோமனாதன்)

சூடாமணி ஒரு பத்திரிகாசிரியன்.

விஜயகுமார் ஒரு பிரபல சினிமா நடிகன்.

தன்னுடைய சிறிய அறையில் கிடந்த ஒரே நாற்காலியில், சாய்ந்தவாறு உட்கார்ந்து சூடாமணி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். மெலிவான அவன் தேகம் சட்டைப் பொத்தான்களில்லாததால், இன்னும் விகாரமாக இருந்தது. அந்தச் சிறிய அறையில் தூசி நிறையப் படிந்திருந்தது. கூரையில், சிலந்திகள் கணக்கில்லாமல் வலைபின்னி யிருந்தன.

திறந்திருந்த ஒரு கதவின் வழியாகச் சிரமப்பட்டு, விஜயகுமார் உள்ளே நுழைந்தான்.

சூடாமணி :- வாருங்கள். (எழுந்து, தான் இருந்த நாற்காலியைக் காட்டி) உட்காருங்கள்.

விஜயகுமார் :- பரவாயில்லை. நீங்கள் உட்காருங்கள்.

சூடாமணி :—நீங்கள் நின்று கொண்டா இருக்கப்போகிறீர்கள்? சரிதான்!

சூடாமணி அடுத்த அறைக்கு ஓடிப் போய் ஒரு 'ஸ்டூலை' எடுத்துவந்து அதில் தான் உட்காருகிறான். விஜயகுமார் நாற்காலியில் உட்காருகிறான். பத்து விநாடி மௌனம்.

விஜயகுமார் :—என்னைத் தெரிகிறதா உங்களுக்கு?

சூடாமணி :—எங்கோ பார்த்திருக்கிறேன். ஆனால் ஞாபகம் இல்லை.

விஜயகுமார் :—என் பெயர் விஜயகுமார். அன்றைக்கொருநாள் சேஷகிரியுடன் உங்கள் காரியாலயத்திற்கு வந்திருந்தேன்.

சூடாமணி :—சேஷகிரியுடனா!... ஓஹோ! சேஷகிரி படத்தில் கதாநாயகனாக நடித்தவர்கள்...

விஜயகுமார்:—ஆமாம், நான்தான்.

சூடாமணி:—உங்கள் பெயர் விஜயகுமாரா?

விஜயகுமார் :—ஆமாம். என் அப்படிக் கேட்கிறீர்கள்?

சூடாமணி:—இல்லை, வேறு ஏதோ பெயரென்று சொன்னார்களேயென்றுதான் கேட்டேன்.

விஜயகுமார் :—'ராமு' என்பது தான் என் சொந்தப் பெயர். சினிமா உலகத்தில் நுழைந்ததும்...

சூடாமணி:—பெயரளவிலாவது நாகரீகம் இருக்கட்டும் என்று பெயரை மாற்றிக்கொண்டீர்கள் போலிருக்கிறது!

விஜயகுமார் :—ஆமாம்! இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே!

சூடாமணி—நானாக ஒன்றையும் கேட்டுத் தெரிந்துகொள்வதில்லை. மக்கள் அவர்களாகவே வந்து இதையெல்லாம் என்னிடம் தெரிவிக்கிறார்கள்.

விஜயகுமார் :—என் விஷயத்தைக் கூடவா?

சூடாமணி:—உங்கள் விஷயமென்றால் மட்டும் ஊர்வாய் அடங்கிவிடுமா என்ன? ஊர்ப்பேச்சு என்றாலே உயர்ந்த நிலையிலுள்ளவர்களிடம் காணப்படுகிற ஊழல்களைப் பற்றியதுதானே!

விஜயகுமார் :—இன்னும் ஏதேனும் என்னைப்பற்றிச் சொல்லுகிறார்களா?

சூடாமணி:—எவ்வளவோ சொல்லுவார்கள். இதையெல்லாம் நான் நினைவில் வைத்துக்கொள்வதில்லை. அதுவும் சினிமா உலகம் என்றாலே எனக்குப் பிடிக்காது. எனக்குப் பிடிக்காத, தேவையில்லாத விஷயங்களில் நான் என் கவனத்தைச்செல்ல விடுவதில்லை. எனக்குப் பிரியமான புத்தகங்களையே இன்னும் என்னால் படித்து முடிக்க முடியவில்லை. இலக்கிய உலகத்தில், எவனாவது ஒருவன் புத்தகம் எழுதி, அதை இன்னொருவன் தன் பெயரை (ஆசிரியனாக) போட்டுப் பதிப்பித்தானானால் அது என் உள்ளத்தில் நிலைத்து நிற்கும். எழுதியனுப்பிய கட்டுரை கதைகளுக்குப் பணம் அனுப்பாத பிரசுரகர்த்தர்களை வேண்டுமானால் நினைத்துக்கொண்டேயிருப்பேன்.

இலக்கிய உலகில் அலைந்துகொண்டிருக்கும் எங்களுக்கு சினிமா உலகில் உங்களைப் போன்றவர்களின் அவதார மகிமையைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமே இருப்பதில்லை. ஆனால் இந்த மக்கள் சும்மாவா இருக்கிறார்கள்? தமக்கு வேண்டாதவனைப் பற்றி அவர்களுக்குத் தேவையிருந்தால் புகழ்ந்து கூறுவார்கள். அவர்களுக்குத் தேவையில்லாவிடில் துணிந்து இகழ்ந்து கூறத் தயங்குவதேயில்லை.

விஜயகுமார்:—ஜன சமுதாயமே இப்படித்தான். தன்னைச் சேர்ந்த ஒருவன் முன்னேறிவிட்டான் என்றால், பொறுப்பதே இல்லை. அகம்பாவமும் கர்வமும் தான் எங்கு பார்த்தாலும்! என்னைப்பற்றி யார் சொன்னார்களென்று சொல்லமுடியுமா?

சூடாமணி:—நான்கைந்து நாட்களுக்கு முன் இங்கு ஒரு பெண் வந்திருந்தாள். அவள் பெயர்கூட ...... மறந்துபோனேன்...... இந்த ஞாபக மறதிதான் அடிக்கடி வந்து என்னைத் தொல்லைப்படுத்துகிறது. ... "வளையல்" என்ற படத்தில் உங்களுடன் அவள் நடித்திருக்கிறாளாம்.

விஜயகுமார்:—சந்திர குமாரியா?

சூடாமணி:—ஆமாம், ஆமாம், சந்திர குமாரிதான். பதினெட்டு பத்தொன்பது வயதிருக்கும்!

விஜயகுமார்:—அவளாகத்தான் இருக்கவேண்டும். ஆமாம், எதற்காக அவள் இங்கு வந்தாள்.

சூடாமணி:—சினிமா நடிகைகள் காரண காரியத்துடனா ஓர் ஆணுடன் பேசுகிறார்கள்? என்னவோ! ... வந்தாள். இந்த நாற்காலியில்தான் உட்கார்ந்தாள். அவளாகவே அவளை அறிமுகப்படுத்திக் கொண்டாள். பத்திரிகை உலகத்தைப்பற்றி அரை மணி நேரம் தனக்குத்தான் தெரியும் என்று பேசினாள்.

விஜயகுமார்:—உங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடிந்ததா அவளது அசட்டுத்தனத்தை?

சூடாமணி:—என்ன செய்வது? விடிந்ததும் விடியாததுமாக, தினம் அடுத்த வீட்டுப் பெண் அபஸ்வரத்தில் சங்கீதம் சாதகம் செய்ய ஆரம்பித்துவிடுவாள். எனக்குக் கோபம் கோபமாகத்தான் வரும். என்றாலும் என்ன செய்யமுடியும்? அதேபோலத்தான் அவளும் பேசிக்கொண்டிருந்தாள். நானும் சகித்துக்கொண்டே இருந்தேன். அப்புறம் சினிமா உலகத்தைப்பற்றிப் பிரசங்கித்தாள். அப்பொழுதுதான் உங்களைப்பற்றிக் கூடச் சொன்னாள்.

விஜயகுமார்:—என்ன சொன்னாள்?

சூடாமணி:—நீங்கள் எப்பவோ பார்த்தசாரதியோடுயிருந்தீர்களாம்.

விஜயகுமார்:—இதை யெல்லாம் சொல்லிவிட்டாளா?

சூடாமணி:—என்? உண்மை தானே?

விஜயகுமார்:—சிலசில சமயங்களில் அந்த அசட்டுப்பெண் உண்மையும் சொல்லத்தான் செய்கிறாள்!

சூடாமணி:—ஆமாம்! என்னைப் போல ஒரு நல்ல பத்திரிகாசிரியனைப் பார்த்ததே யில்லை யென்றுகூடச் சொன்னாள்.

விஜயகுமார்:—எதற்காக இங்கு வந்தாளாம்?

சூடாமணி:—அதைத்தான் அவளிடமும் நான் கேட்டேன். "சும்மா பார்த்துப் போகலாம் என்றுதான் வந்தேன்" என்றாள். "இது ஒன்றும் மிருகக்காட்சிச் சாலையில்லை" என்று சொன்னேன். அந்தப் பதிலில் அவளுக்கு அதிருப்திதான்; ஏதோ முணுமுணுக்கவும் செய்தாள். "நெஞ்சில் உரமோ, நேர்மையோ இல்லாதவர்கள்தான் முணுமுணுப்பார்கள்" என்று சொன்னேன். "பேதைகளும் முணுமுணுப்பது உண்டு" என்றாள். அவளுடைய ஒன்றரை மணிப் பேச்சில் அந்த ஒரு வாக்கியம்தான் என்னால் ரஸிக்க முடிந்தது. உங்களுடன் நடித்திருக்கிறாள் என்கிறீர்களே, அந்த "வளையல்" என்ற படத்தில்தான் அவள் நன்றாக நடித்திருக்கிறாளாம். அதை நான் பார்த்து நல்ல விமர்சனம் செய்யவேண்டுமாம், என் பத்திரிகையிலே. அத்துடன் அவள் படத்தையும் பத்திரிகையில் போட்டு அவளைப்பற்றியும் நான்கைந்து பக்கங்கள் எழுத வேண்டுமாம்.

விஜயகுமார்—எழுதப் போகிறீர்களா?

சூடாமணி:—அவளுடைய ஆடலையும் பாடலையும் வர்ணித்துக்கொண்டிருக்க, நான் கர்னாடகமா என்ன? எங்களுடைய இலக்கியப் பத்திரிகையில்தானா இந்தச் சினிமாக் கூத்தெல்லாம் செய்யவேண்டும்!

விஜயகுமார்:—அப்புறம் அவளை என்னதான் சொல்லிப் போகச் சொன்னீர்கள்?

சூடாமணி:—"நான் ஓர் இலக்கியப்பத்திரிகையின் ஆசிரியன். எனக்கும் உங்கள் வழிக்கும் ஒத்துவராது" என்று சொன்னேன். அவ்வளவுதான். அவளுக்கு வந்த ஆத்திரத்தைப் பார்க்க வேண்டுமே! "நீங்கள் பெண்களை அவமதிக்கிறீர்கள்" என்றாள். "பெண்களைப் பெண்களாயிருக்கும் வரைதான் அவமதிக்கக் கூடாது. அவர்கள் ஆண்களாக மாறிய பின்னர் அவர்களுக்குச் சமத்துவம் கொடுத்து, அவர்களை அவமதிக்கலாம்; திட்டலாம்; அடிக்கக் கூடச் செய்யலாம்" என்றேன். அதற்கப்புறம் அவள் இங்கு நிற்கவேயில்லை.

விஜயகுமார்:—நீங்கள் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டீர்கள்.

சூடாமணி:—எப்படி?

விஜயகுமார்:—அவளைப்பற்றி உங்கள் பத்திரிகையிலே சிறிது உயர்வாக மட்டும் எழுதியிருந்தீர்களானால் உங்களுக்கு வேண்டிய அளவு பணம் அவள் தந்திருப்பாள்.

சூடாமணி:—அவள் அன்றைக்கு என்னிடம் பேசியதிலிருந்தே அது தெரிந்தது. சில பத்திரிகாசிரியர்கள் கூட அந்த மாதிரிதான் சம்பாதிக்கிறார்களாம்!

விஜயகுமார்:—சில பேரென்ன? அதிகமான எழுத்தாளர்கள் அந்த மாதிரி இருப்பதால்தான் வாழ்வையே நடத்துகிறார்கள்.

சூடாமணி:—பணம் என்னவோ இன்றைக்கில்லாவிடில் என்றாவது ஒருநாள் இந்த விதத்தில் இல்லாவிடில் எந்த வழியிலாவது சம்பாதிக்க முடியும். ஆனால் இதுவரை பல அல்



பெரிய நாடுகளுக்குச் செய்தியனுப்பச் சிறிய மனிதர்கள் முயற்சி செய்வது ஏளனத்திற்கே இடமாகும்.

இந்தியா தேசத்திற்கு அறிவுரை கூற நான் என்ன அவ்வளவு பெரியவனா?

—ஜார்ஜ் பர்னார்ட் ஷா.

வல்களுக்கிடையில் சம்பாதித்து, பேணி, போற்றி, வளர்த்து வந்த பிறர் பெற முடியாத மதிப்பைப் பணத்திற்காக இழந்து விடுவதா?

விஜயகுமார் :—இதெல்லாம் பழையகாலத் தத்துவங்கள். உங்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. ஆனல், அது உங்களை எந்த நிலைமையில் வைத்திருக்கிறது? உலகத்தின் பைசாப் பெருத மதிப்புக்காக, இன்னும் எத்தனை நாள் தான் இந்தச் சுகாதாரமில்லாத அறையிலே இருக்கப் போகிறீர்கள்? உலகம் உங்களிடம் வைத்திருக்கும் மதிப்பு, உங்கள் வாழ்க்கைக்குப் பயன்படும்பொழுது, என் நீங்கள் மறுக்கிறீர்கள்?

சூடாமணி :—நீங்கள் என்னுடைய நேர்மையான உள்ளத்தைக் கலைக்கிறீர்கள், தயவுசெய்து நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லுங்கள்.

விஜயகுமார் :—தவருக ஏதேனும் சொல்லியிருந்தால்...

சூடாமணி :—சொல்லியிருந்தால்! என்ன? சொல்லிக்கொண்டுதானே இருக்கிறீர்கள்!

விஜயகுமார் :—மன்னிக்க வேண்டும்.

சூடாமணி :—நேரமாகிறது, உலகச் சச்சரவுகளில் ஈடுபட்டு, என் கற்பனையுலகச் சிந்தனைகளை விட்டுவிட நான் தயாராக இல்லை.

விஜயகுமார் :—நான் என் சொந்தத்தில் ஒரு படம் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். அதற்குக் கதை வசனம் நீங்கள் எழுதித் தருகிறீர்களா என்று கேட்டுப் போகத்தான் வந்தேன்.

சூடாமணி:—நன்ருக எழுதித் தருகிறேன்! ஆனல் ஒரு படம் தயாரிப்பது என்ருலே எவ்வளவோ பணம் செலவாகுமே!

விஜயகுமார் :—அதிகப்பணம் செலவாகத்தான் செய்யும்! என் அப்படிச் சந்தேகமாகக் கேட்கிறீர்கள்?

சூடாமணி :—இல்லை ... நீங்கள் ஒரு சாதாரண ஆளாக இருந்தவர் என்று அந்தப் பெண் சொன்னளே! சினிமா உலகில் புகுந்த இந்த இரண்டொரு வருஷத்துக்குள்ளாகவா ஒரு படம் தயாரிப்பதற்கு வேண்டிய அளவு பணம் சம்பாதித்து விட்டீர்கள் என்று பார்த்தேன்!

விஜயகுமார் :—அதுவா? படத்திற்கு நானேதான் கதாநாயகனும், டைரக்டரும். எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணைத்தான் கதாநாயகியாகப் போடப்போகிறேன் மீதம் ஸ்டுடியோ, சில்லறை நடிகர்கள் இவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அளவுக்குக் கையில் பணம் இருக்கிறது. நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லை. வெகு சீக்கிரம் படத்தைத் தயாரித்துவிடுவேன்.

சூடாமணி :—கதை, வசனம் இதற்கு முன் எந்தப் படத்திற்கும் நான் எழுதினதேயில்லை. கதை, வசனம் எழுதுவதைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுகிருர்கள். உங்களுடைய நடிகர்களுக்கேற்றபடி கதையை யமைத்து, அவர்கள் உச்சரிப்பதற்குத் தகுந்தாற்போல வசனங்கள் எழுதவேண்டுமாமே!

விஜயகுமார் :—அந்த மாதிரி கதை வசனம் எழுதுவது... இல்லை, இல்லை! எழுதச் செய்வதும உண்டு. ஆனல் உங்கள் விஷயத்தில் நாங்கள் அந்தமாதிரி ஒரு கூட்டுப்பாடும் செய்யமாட்டோம். உங்கள் சிருஷ்டி விசேஷத்தை நாங்கள் குறைப்படுத்தாமல் சர்வ ஜாக்கிரதையுடன் நடிக்கிருேம்.

சூடாமணி :—அத்துடன் நான் கதை யெழுதினல், காதல், கீதல்

எல்லாம் வராது. நுணுக்க மான சிந்தனைகளைத்தான் புகுத்துவேன். படம் எல்லோரும் தான் தயாரிக்கிறார்கள். நம்முடைய தயாரிப்பில் தனி விசேஷம் இருக்கவேண்டும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

விஜயகுமார்:—நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் நுட்பமான சிந்தனைகளை அறிந்து கொள்ளும் பக்குவம் இன்னும் ஜனங்களுக்கு உண்டாகவே யில்லையே! ஜனங்களுக்குப் புரிய வைப்பதற்காக நுணுக்கங்களை விளக்கமாகத் தயாரித்தால், நுணுக்கத்தின் விசேஷம் போய்விடுமே!

சூடாமணி:—அதற்கென்ன செய்வது? என்னுடைய எண்ணத்திற்கு ஜனங்கள் ஒத்து வரமாட்டார்கள். அவர்களுக்கு ஏற்க என்னாலும் எழுத முடியாது.

விஜயகுமார்:—இந்த நிலையில் ஒரு யோசனை எனக்குத் தோன்றுகிறது. "பாமா விஜயம்" என்ற கதையை நல்ல முறையில் நீங்கள் சித்திரித்துத் தந்தால், நான் படம் தயாரிக்கிறேன்.

சூடாமணி:—இந்தியத் தலைவர்கள் எங்கு பார்த்தாலும் விஜயம் செய்கிற இந்தக் காலத்தில் கற்பனைக் கெட்டாத பாமாவை விஜயம் செய்ய வைப்பதா?

தயவு செய்து உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அறிவுக் கொவ்வாத கதைகளை எழுதுவதிலே, ஒருவனுடைய முட்டாள் தனம் தான் புலப்படுமே தவிர, அறிவு தென்படாது. என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். பாமாவையும் கிருஷ்ணனையும் என் பேனா எழுதாது.

விஜயகுமார்:—நீங்கள் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்வரை உங்களால் முன்னேறவே முடியாது.

சீர்திருத்தக்காரர் என்ற பெயரை வைத்துக்கொண்டிருப்பவர்தான் புராணப் படங்களுக்குக்கதை வசன கர்த்தா. அறிவுக்கு ஒவ்வாததை நம்பாதவர் என்று சொல்லிக்கொண்டு செய்வதெல்லாம் நேர்மாறு. அப்படி யிருப்பதால்தான் அவரால் உல்லாஸமாக வாழ முடிகிறது.

சூடாமணி:—உல்லாஸமாக எங்கே வாழ்கிறான்? வியாதியும் விவகாரமும் தானும் அவன் கண்டது! இந்த மாதிரி வாழ்வும் எனக்கு வேண்டியதில்லை. நான் பாமாவை பங்கப்படுத்தவும் வேண்டியதில்லை.

விஜயகுமார்:—ஏதோ சொன்னேன், உலகம் இருக்கிறவிதத்தை.

சூடாமணி:—(ஏளனமாக) ஆமாம், தெரிந்ததைப் பிறரிடம் சொல்லுவதிலே பரோபகாரம் இருக்கத்தான் செய்கிறது!

விஜயகுமார்:—நான் சென்று வருகிறேன். மீண்டும் எப்பொழுது சந்திப்போம்?

சூடாமணி:—உங்களிடம் அறிவு உதயமான பின்னர்!

(அம்பிகாபதி)

இடம் :—தர்பார்.

பாத்திரங்கள் :—தசரத சக்கரவர்த்தி —வசிஷ்டர்—மந்திரி சுமந்திரர் —இராமன்—கட்டியக்காரன்.

(தர்பாரில் தசரத சக்கரவர்த்தி பிரவேசிக்கிறார்.)

கட்-ன் :—ராஜாதி ராஜா! ராஜ கெம்பீரர்! ராஜமார்த்தாண்ட தசரத சக்கரவர்த்தியார் தர்பாருக்கு வருகிறார்! தயார்! தயார்!!

(சக்கரவர்த்தி சபையில் புகுந்து ஆசனத்தில் அமருகிறார்.)

சக்-தி :—சபையோர்களே! அவசரமாக உங்களை அழைத்தது எதற்காக வென்றால்......

சபையோர்கள்:— (ஏககுரலில்) எதுவானாலும் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

சக்-தி:—சந்தோஷம்! சபையோர்களே!......பொறுமையே உருவாய் வந்த இராமனை என் மகனாகப் பெற்றேன். திருமகளே உருவாய் வந்த சீதையை என் மருமகளாகப் பெற்றேன். இதுவே நான் இம்மையில் அடையும் இன்பம். இனி மறுமையில் அடையும் இன்பத்திற்கு நான் கானகஞ் சென்று கடுந்தவஞ் செய்ய ஆசைப்படுகிறேன். அதற்காக உங்கள் அபிப்பிராயம் அறிய விரும்புகிறேன்.

சபை-ள் :—(ஏககுரலில்) வசிஷ்ட பகவானே! தாங்கள் தயவுசெய்து எங்கள் சார்பாக பதில் அளிப்பீர்களாக.

வசி-ர் :—அரசே! நீர் தவஞ்செய்ய ஆசைப்படுவது புதிதல்ல. உம்முடைய முன்னோர்கள் செய்த முறையைத்தான், நீரும் பின்பற்றித் தவஞ்செய்ய விரும்புகிறீர். ஆனால் நாட்டை ஆட்சி செய்வது யார்?

சக்-தி :—இளவரசன் இராமன் தான்.

வசி-ர் :—(யோசனையோடு) இராமனா?

சக்-தி :—(ஆச்சரியத்தோடு) ஏன்! இராமனுக்கு ஆளும் திறமை இல்லையா?

வசி-ர் :—இல்லையென்று யார் சொல்ல முடியும்? இராமன் தன்னுடைய பெருவிரலால் ஒரு பெரிய வில்லை ஒடிக்கவில்லையா? ஒரு நொடிப்பொழுதில் பாசுராமனைத் தோற்கடிக்க வில்லையா? இதெல்லாம் இராமனது திறமையைக் காட்ட வில்லையா?

சக்-தி :—ஆம். பிறகு சந்தேகம் என்ன?

வசி-ர்:—அரசே! அரசவையில் அமருவதற்கு, அங்க அளவுகள், சில தேவை அல்லவா?

சக்-தி:—ஆம். உயரம், கனம், உடல் இவைகளின் அளவுகள் ஒரு திட்டமாக இருக்கவேண்டும். வசிஷ்ட பகவானே! நம் இராமனுக்கு இந்த இயல்புகள் இல்லையா?

(மந்திரி சுமந்திரர் எழுந்து குறுக்கிட்டு)

சும-ர்:—அரசே! அதிலேன் சந்தேகம்? அடியேன் போய் அளந்து பார்த்து வருகிறேனே!

சக்-தி:—சுமந்திரரே! நீர் சொல்வது சரியல்ல. இராமனை அளப்பதென்பது, அவனை அவமதித்ததாகும். ஆகையால் அது தகாத காரியம்.

சும-ர்:—அரசே! பிறகு இந்தச் சந்தேகம் எந்த விதத்தில்தான் தெளிகிறது?

சக்-தி:—சுமந்திரரே! அதை நான் சூட்சுமமாகக் கண்டு பிடித்து விடுகிறேன். வசிஷ்ட பகவானே! இராமனை வரவழைத்து அவன் அபிப்பிராயம் அறியலாமா?

வசி-ர்:—தாராளமாகத் தருவிக்கலாம்.

சக்-தி:—சுமந்திரரே! இராமனை அழைத்துவாரும்.

சும-ர்:—இதோ வந்துவிட்டேன்.

(சுமந்திரர் இராமனை அழைத்து வருகிறார். இராமன் சந்தோஷமாகச் சபையில் புகுந்தான்.)

இரா-ன்:—குருநாதா! நமஸ்காரம்.

(வசிஷ்டர் ஆசீர்வதித்து, இராமன் அரசாள அவதரிக்கவில்லை, அசுரர்களை அழிக்க வந்தவர் என்னும் குறிப்பறிந்து)

வசி-ர்:—மங்களமுண்டாகுக! இராமா! தந்தையின் அழைப்பிற்கு இணங்கி, தர்பாருக்கு வந்தாய். ஆனால் நீ வந்த காரியம் நிறைவேற வேண்டும்!

(வசிஷ்டர் குறிப்புக்குப் பொருத்தமான முறையில்)

இரா-ன்:— (புன்னகையோடு) சுவாமி! தங்கள் எண்ணந்தான் ஈடேறும்.

(இராமன், தந்தை தசரத சக்கரவர்த்தியின் சமீபம் போகிறான். சக்கரவர்த்தி எழுந்து ஆவலோடு இராமனைக் கட்டித் தழுவித் தன் மார்போடு அணைத்துக்கொண்டு பக்கத்திலிருக்கும் ஆலோசனை மண்டபத்திற்குள் போகிறான்.)

நலங்கொள் மைந்தனைத்
தழுவினன் என்பதேன்? நளிநீர்
நிலங்கள் தாங்குறும்
நிலையினை நிலையிட நினைத்தான்
விலங்கல் அன்னதிண்
தோளையும் மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும்
தனது தோள் மார்பு கொண்டளந்தான்.

சும-ர்:—(ஆச்சரியத்தோடு) வசிஷ்ட பகவானே! இராமனுக்குக் கல்யாணம் ஆகியும், சக்கரவர்த்திக்குப் பிள்ளையின்மேல், உள்ள பாசம் இன்னும் குறையவில்லையே!

வசி-ர்:—(புன்சிரிப்போடு) சுமந்திரரே! அரசர் இராமனை ஆவலோடு கட்டி அணைத்துக்கொண்டது, ஆசையால் அல்ல!

சும-ர்:— (ஆச்சரியத்தோடு) வேறு?

வசி-ர்:—(நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பதேன்?) தன் மகன் இராமனை தசரதர் தழுவினது என் தெரியுமா?

சும-ர்:—சொன்னால்தானே புரியும்.

வசி-ர்:—(களிநீர் நிலங்கள் தாங்குறும் நிலையினை நிலையிட நினைத்தான்) நீரினால் சூழப்பட்ட இந்த பூமி பாரத்தைத் தாங்கி அரசாளும் வலிமை இருக்கிறதாவென்று அறிய எண்ணினார்.

சும-ர்:—இராமன் உடல் வலிமையை அறிவதற்காக, அவனைக் கட்டித் தழுவுவானேன்?

வசி-ர்:—(விலங்கல் அன்ன திண் தோளையும் மெய்த்திரு இருக்கும் அலங்கல் மார்பையும் தனது தோள் மார்புகொண்டு அளந்தான்). முழு வன்மையும் உள்ள தசரத சக்கரவர்த்தியின் தோளையும், விஷ்ணுவின் அவதாரமாகிய இராமனுடைய திருமகள் வாழக்கூடிய மார்பையும் ஒன்றோடொன்று சேர்த்துப் பொருத்தி வைத்து, தன் மார்பின் அகலத்திற்குச் சரியாக, இராமன் மார்பு இருக்கிறதாவென்று தந்திரமாக அளந்தல்லவோ பார்க்கிறார் நமது தசரத சக்கரவர்த்தி!

(ஆலோசனை மண்டபத்திலிருந்து கட்டியக்காரன் வருகிறான்.)

கட்-ன்:—சுவாமி! அரசர் ஆலோசனை மண்டபத்திற்கு அழைக்கிறார்.

வசி-ர்:—சுமந்திரரே! வாரும் போகலாம்.

(வசிஷ்டரும் சுமந்திரரும் போகிறார்கள்.)

(திரை விழுதல்.)



வலையில் விழுந்து விட்டாற்போ லிருக்கிறதே!
'தூப்கே தூப்கே' என்ற படத்தில் ஜரினவும் சாந்திகுமாரும்.

ஒய். வி. ராவ் தயாரிக்கும் ஹிந்தி ராம்தாஸில்
பரேஷ் பானர்ஜியும் ஜ்யோத்ஸ்னு குப்தாவும்.

"பத்திரிகை படிக்காதே!"

(பிரயாணி)

"தினசரி!, தினமணி!, சுதேசமித்திரன்!, பாரததேவி!, ஆனந்த விகடன்!, நாரதர்!, இந்துஸ்தான்!, பேசும் குரல்!" என்று காலை $8\frac{1}{2}$ மணி சுமாருக்கு திருவாரூர்ப் புகைவண்டி நிலையத்தில் மாயவரத்திலிருந்து புகைவண்டி, ஒன்று வந்து நின்றவுடன் கத்தினான் ஒரு பத்திரிகை விற்கும் பையன்.

வண்டியிலிருந்த வாலிபன் ஒருவன் பத்திரிகை விற்கும் பையனைக் கூப்பிட்டு, "பாரததேவி" ஒன்று வாங்கிப் படிக்க ஆரம்பித்தான்.

பத்துவிரல்களில் பாதிவிரல்களுக்குமேல் மோதிரங்கள். "ஜிலு, ஜிலு" என்று ஜொலிக்கும் சுத்த வைரத்தால் கட்டப்பட்ட கடுக்கன் காதுகளில். வெள்ளைக் கடுக்கனுக்கு வெளுப்பு நிழல் தரும் முறையில் அன்று வெளுத்த சட்டை. சட்டைப் பையிலிருந்து வட்டமான மோராவுடன் தொங்கிக்கொண்டிருக்கும் தங்க கெடியாரச் சங்கிலி. சாண் அளவு சரிகை போட்ட அங்கவஸ்திரம். எட்டு முழத்துக்குமேல் உள்ள பட்டுக்கரை வஸ்திரம் இடையில். இத்தனையோடும் பத்திரிகை வாங்கிப் படித்துக் கொண்டிருக்கும் வாலிபன் எதிரில் வண்டியில் உட்கார்ந்திருக்கிறார் ஒருபெரிய கனவான்.

பையன் பத்திரிகை பார்க்கும் வேளையில், கனவான் தன் சட்டைப்பையிலிருந்து சட்டென்று தங்கச் சட்டங்களால் கட்டப்பட்ட தன்னுடைய மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துக் கண்களில் அணிந்து கொண்டு பையன் பார்க்கும் பத்திரிகையின் ஒரு பகுதியை எடுத்து ஆடம்பரமாக வாசிக்க ஆரம்பித்தார். கண்டான் பையன். கடுமையாகப் பார்த்தான். "பத்திரிகை படிக்காதே!" என்று வெடுக்கென்று பிடுங்கி மடித்து வைத்துக் கொண்டான்.

கனவானுக்குக் கண்களில் தீப்பொறி பறந்தது. சுவாசம் சுவாலையாக வீசியது. தலை கிறுகிறுவென்று சுற்ற ஆரம்பித்தது. கேவலம் ஒரு அணாப் பத்திரிகையால் உண்டான அவமதிப்பின் காரணம் தெரியாமல் கோபத்தோடு பையனை ஏற இறங்கப் பார்த்தார். காரணம் கேட்கவோ நா எழவில்லை. இருந்தாலும், செல்வத்தின் செருக்கு அவரைச் சும்மா இருக்கவிடவில்லை. கோபத்தால் வாய் குளற, உடல் நடுங்க, "என்னப்பா! பத்திரிகையின் பகுதியைப் பார்த்தால் என்ன? இதற்காக 'பத்திரிகை படிக்காதே!'

என்று அவமரியாதையாகச் சொல்லி விட்டாயே!'' என்று கனவான் ஆத்திரப்பட்டார்.

"என்னைவிடத் தாங்கள் எளியவரா? தனவந்தரா?'' என்றான் வாலிபன்.

''பார்த்தால் தெரிய வில்லையா?'' என்று படபடப்போடு பதில் உரைத்தார் கனவான்.

"பத்திரிகை! பத்திரிகை!!'' என்று பல நூறு தடவைகள் கத்துகிறான் பத்திரிகைக்காரன். அவனைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்களே தவிர ஓர் அணு கொடுத்து ஒரு பத்திரிகை வாங்கி வாசிக்க விருப்பமில்லை. 'அம்பட்டனைக் கண்டால்—அரிக்குமாம் மீசைதாடி'' என்பதுபோல், பிறர் வாங்கிய பத்திரிகையைப் பார்த்தவுடன் தங்களுக்குப் படிக்கத் தோன்றிற்றோ?'' என்று கிண்டலாகக் கேட்டான் வாலிபன்.

''அணு ஒன்றுக்காக அப்படி நான் செய்யவில்லை. அவசியமான அரசியல் விஷயங்கள் இருக்கின்றனவா வென்று பார்த்தேன்'' என்று வீம்பாகவே பதில் சொன்னார் கனவான்.

''என்னைவிட தனவந்தர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தாங்கள், தங்களுக்காகத் தனியாக ஒரு பத்திரிகை வாங்கினால் என்ன? பத்திரிகை கிடைக்காத இடமா இது? வாங்குவதற்குப் பணம் இல்லாதவர்களா தாங்கள்?'' என்று கேட்டான் வாலிபன்.

"பத்திரிகையைக்கூட பார்க்கக் கூடாதென்று சொல்லும் உன்னால் உலகத்துக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது?'' என்று தியாகியைப்போல் கேட்டார் கனவான்.

"பத்திரிகையே கிடைக்காத குக்கிராமமாக இருந்தால் ஒரு பத்திரிகையைப் பலர் பார்ப்பது சகஜம். பலவிதமான பத்திரிகைகள் கிடைக்கும் பட்டணங்களில் தங்களைப்போல் எல்லோரும் ஒரு பத்திரிகையையே படிக்க ஆரம்பித்தால் பத்திரிகைத் தொழில் நடததும் பத்திரிகைக்காரர்கள் தங்கள் பத்திரிகைத்தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில் பார்க்க வேண்டியதுதான்'' என்று சுடச்சுடச் சொன்னான் வாலிபன்.

பிரபுக்குப்பிறந்தது ரோஷம்! அழைத்தார் பத்திரிகைக் காரனை. அவருக்காக ஒரு பத்திரிகை அப்பொழுதே வாங்கினார். ஆரம்ப முதல் அடி வரையில் விடாமல் படிக்க வேண்டுமென்று வாசிக்க ஆரம்பித்தார். வண்டியும் நகர்ந்தது. ஓடும் வண்டி அவருக்கு ஊஞ்சல்போலிருந்தது. பத்திரிகையைப் பார்த்துக் கொண்டே நித்திரையில் ஆழ்ந்தார். கையிலிருந்த பத்திரிகை நழுவியது கீழே! பக்கத்திலிருந்து பார்த்தவர் ஒருவர் பத்திரிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்!

நடன சிங்காரி!

'ஸ்ரீ கமல் ப்ரொடொக்ஷன்ஸ் தயாரிக்கு "மஹாத்மா உதங்கரில்" ஒய்யார நாட்டி மாடி காட்சி யளிக்கிறார் பேபி கமலா'

இவர்கள்தான் ஐயா தென்னிந்தியாவின் பிரதம சினிமா நட்சத்திரங்கள்!

இவர்கள் அனைவரும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதின் பொருட்டு சென்னை அகில இந்திய ரேடியோவில் தாங்கள் தங்கள் நன்றியறிதலை சுதந்திர இந்தியாவுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

அணிந்திருக்கும் ஆடையோ மிகக் குறைவு! அதையும் மறைக்கப் பார்க்கிறார் என்று நினைக்கிறீர்களா? ஆர். கே. ஓ. ரேடியோ தயாரிப்பான "ரப் ஷாட்" என்ற படத்தில் ஜெப்டானல் என்ற நடிகை கடற்கரையில் காட்சி யளிக்கிறார்!

தேவதாசியில் மதுரமும் கிருஷ்ணனும் (சுகுமார் பிக்சர்ஸ் தயாரிப்பு)

சிறு கதை

"பூங்கோதை"

(சிபி)

1

தென்றலில் தலையசைக்கும் மலர்கள்! விடுதலையோடு பறந்து திரியும் பறவைகள்! அலைகளை எழுப்பும் கடல்கள்! இயற்கையின் கண் கொள்ளாக் காட்சிகள்! இவ்வளவும் இருக்கும் பொழுது நான் ஏன் இவ்வுலகத்தில் இன்பமே இல்லை என்று வேதாந்தம் பேச வேண்டும்? முட்களின் இடையே பிறந்தாலும் ரோஜா மலர் தன்னைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? நீங்களே சொல்லுங்கள், என் உருக்கமுள்ள கதையைக் கேட்டு, உங்கள் முடிவினை.

நானும் பழமலையும் சிறுவயதில் ஒன்ருகவே ஓடி ஆடி விளையாடுவோம். அப்பொழுதெல்லாம் அவருக்குப் பன்னிரண்டு வயது. எனக்கோ எட்டு வயது. இருவருக்கும் இணைபிரியாத நட்பு. குறும்புக்காரப் பயல்கள் எங்களைப் பற்றிக் கேலி சொல்லிச் சிரிப்பார்கள். அதையெல்லாம் நாங்கள் கவனிப்பதே இல்லை! நாட்கள் ஆக ஆக நாங்கள் ஒன்ருகச் சேர்ந்து விளையாடுவதை மற்றவர்கள் தடுத்தார்கள். ஆயினும் எங்கள் சந்திப்பும் விளையாட்டும் நின்றபாடில்லை.

எங்கள் கிராமத்தில் நான் தான் மிக அழகி என்று எல்லோரும் சொல்லுவார்கள். பழமலையும் என் கண்ணுக்கு மிக அழகாகத்தான் தோன்றினுர். ஆனுல் ஊரில் இருப்பவர்களோ என்னையும் அவரையும் பார்த்து "எள்ளும் பச்சரிசியும் கலந்தாப்பலே" என்று தான் சொல்லுவார்கள். பாவம்! அழகு அழகு என்று குணத்தைப் பாராமல் ஏமாந்த மக்கள் எத்தனையோ பேர்கள்! பழமலையோ எங்களூரிலேயே பணக்கார வீட்டுப் பிள்ளை. நானே பரம ஏழை!

நான் பெரியவளாகிவிட்ட பிறகு அவரைச் சந்திக்க முடியவே இல்லை. என் மனம் படாத பாடு பட்டது. மனம் இருந்தால் வழிதானு இல்லை? அவருடன் என் உள்ளக் கிளர்ச்சிகளை அடிக்கடி தெரிவிக்க எதிர் வீட்டுக் கண்ணம்மாள் கிடைத்தாள். அவளுக்கு வயது ஏழு தான் என்ருலும் அபார சாமார்த்தியக்காரி, சொன்னதை அப்படியே போய்ச் சொல்லுவாள்.

எங்கள் இருவர்க்கும் தூது போவதால் அவளுக்குக் காசும் தின்பண்டமும் நிறையக் கிடைத் தன.

நான் வீட்டினுள் அடைபட்டு இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. எங்கள் இருவர்க்கும் நட்பில் ஆரம்பித்த வாழ்க்கை காதலில் சென்று கனிய ஆரம்பித்தது. என் பெற்றோர்களும் என் மணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர்கள். பழமலை வீட்டார் வந்து என்னைக் கேட்க மாட்டார்களா என்று என் பேதை மனம் தத்தளித்த துண்டு. ஆயினும் சீமானின் சிங்கார மாளிகையைப் பிரகாசிக் கச் செய்யும் ஆபரணச் சிங்காரி அல்லவே நான். அழகிருந்து என்ன பயன்! ஏழை வீட்டில் பிறந்த அழகிக்கு என்ன பெரு மை இருக்கிறது? குப்பையில் கிடக்கும் மாணிக்கத்தைக் கண் ணாடிக்கல் என்று தானே உலகம் நினைக்கிறது!

2

அன்று ஆடி வெள்ளிக் கிழமை! எங்களூர் மாரியம்ம னுக்குக் கூழ் ஊற்றித் தெருக் கூத்தும் வைத்தார்கள். தேவ னூர்த் தெருக் கூத்துக்காரர்கள் என்றால் மிகவும் பெயர் பெற்ற வர்கள். மற்றவர்களைப் போல அல்ல அவர்கள். ஒரு நாள் தெருக் கூத்துக்குச் சாப்பாட்டு டன் பத்து ரூபாயும் ஆளுக்கு ஒரு மொந்தை கள்ளும் கொ டுத்து விடவேண்டும்! அன் றைய தினம் "அரிச்சந்திர புரா ணம்." சந்திரமதி வேஷம் போடு கிறவன் அழ ஆரம்பித்தால் விடிய விடிய அழுவானும்! ஆக வே ஊரே அன்றிரவு தெருக் கூத்துக்காகக் கூடி விட்டது. எங்கள் வீட்டிலும் என் தாயும் தகப்பனும் சென்று விட்டார் கள். எனக்குத் துணையாக என் பாட்டி மட்டில் வீட்டுத் திண் ணையில் படுத்துக் கொண்டாள்.

முன் ஏற்பாட்டின் படியே இரவு பத்து மணிக்கு நானும் அவரும் எங்கள் தோட்டத்தில் சந்தித்தோம். என்னைக் கண்ட தும் அவர், "பொன்னம்மா!" என்று கூறி அழைத்தவாறே அணைத்துக் கொண்டார். என் உடல் உதறியது, வாய் குளறி யது, பேசுவதற்கே ஒன்றும் தோன்றவில்லை. கடைசியாக இருவரும் பேசத் தொடங் கினோம்.

இருவரும் தனித்தனியே வருந்துவது கூடாதென்றும் தன்னுடன் ஓடிவந்து விட்டால் பட்டணம் சென்று பிழைக் கலாம் என்றும் வழி சொன்னர். முதலில் எனக்கு அவ்வழி விருப் பமாகவே தான் இருந்தது. பிறகு நானே யோசித்துப் பார்த் தேன். அப்படி ஓடி விடுவதால் இருவர்க்கும் பழிச் சொல் ஏற் படுமே என்று எனக்குப் பட் டது. ஆகவே அவர் சொல்லிய வழிக்கு நான் ஒப்புக்கொள்ள முடியாதென்று சொல்லி விட் டேன். கடைசியாக இருவரும் நேர் வழியின் மூலமாகவே

வெற்றி பெறுவதென்று தீர்மானித்தோம். கிழக்கே வெளுக்கும் நேரமாகி விட்டதால் இருவரும் பிரியா மனத்துடன் பிரிந்து விட்டோம்.

மறுநாள் முதல் அவர் தன் தாய் தகப்பனிடம் என்னையே மணம் செய்து கொள்ளப்போவதாகவும் இல்லாவிட்டால் தற்கொலை செய்து கொளவதாகவும் பயமுறுத்தினர். நல்ல காலமாக நாங்கள் இருவரும் ஒரே இனம் மட்டிலுமல்ல, சொந்தக்காரர்களும் கூட. பண விஷயத்தில்தான் அவர்கள் மேலும் கீழும் பார்க்கத் தொடங்கினர்கள். நாளடைவில் அவர் தொந்தரவு பெருகியது. மேலும் ஒரே மகன். எங்கே தற்கொலை செய்து கொள்ளுகிருனே என்ற பயம் வேறு ஏற்பட்டு விட்டது. ஆகவே வேறு வழி இல்லாமல் என் பெற்ருேர்களுடன் கலந்தனர். கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? உடனடியாகத் தீர்மானிக்கப்பட்டது. நல்ல காலமாக ஜாதகம், சகுனம், வரம், இவைகள் எல்லாவற்றிலும் நல்ல முடிவே கிடைத்தது. நல்லதோர் தினத்திலே எங்கள் திருமணமும் நடைபெற்றது.

திருமணம் மிகச் சிறப்பாகவே நடைபெற்றது. நாங்கள் அங்கே சம்பந்தம் செய்து கொண்டதைப் பற்றிப் பலருக்கும் பொருமை! "கொடுத்து வைக்க வேண்டாமா! ஒரே பையன் பழமலே, எது எப்படிப் போனாலும் லட்க்ஷ ரூபாய்க்கு மேல் சொத்து இருக்கிறது. அவன் பெற்ருேர் கண்களை மூடிக் கொண்டால் பிறகு மாமியார் வீடு வைத்தது தான் சட்டம்" என்றெல்லாம் என் எதிரிலேயே பேச ஆரம்பித்தார்கள்.

3

புது வாழ்வில் புகுந்த எங்களுக்குத் துன்பம் என்பதே தெரியாமல் போய் விட்டது. உலகில் அவ்வளவு இன்பம் இருக்கும் என்று அது வரையில் எனக்குத் தெரியாது. சதா சிரிப்பும் கேலியுமே! ஆகா! அந்த இன்பம்—அந்த வாழ்க்கை.........

மனத்தில் மகிழ்ச்சி இருப்பதாகவே நான் நினைத்தேன். நான் படுத்துறங்கியது பஞ்சணை தான் என்ருலும் அதன் அடியிலே பொருமைத் தீயைக் கக்கும் எரிமலை இருப்பதை அறியாமல் போனேன். நான் எவ்வளவு தான் உபசாரம் செய்தாலும் என் மாமன் மாமிக்கு என்மேல் வெறுப்பு இருந்து கொண்டே வந்தது. காரணமற்ற வெறுப்பு! ஆனல் அதுவே காலப் புயலோடு சேர்ந்து கனல் விட்டு எரியத் தொடங்கியது! அவர்கள் அப்படி என்னை வெறுப்பதற்குக் காரணம் நான் ஏழையின் மகள் என்பது தான். எனக்குச் சீர்வகைகள் ஒன்றுமே வரவில்லை என்ற சீற்றம் வேறு மறுபக்கம். இதற்கெல்லாம் நான் என்ன செய்வேன்?

விரைவில் வருகிறது!
லியோ பிலிம்ஸ்...
சிவயோகி
இசையரசு
தண்டபாணி தேசிகர்...
கே. சாரங்கபாணி...
டி. ஆர். ராமச்சந்திரன்..
சூரபி மற்றும் பலர் நடிப்பது.
டைரக்ஷன்.. கிருஷ்ணன்-பஞ்சு
ஸ்டுடியோ. . . . . நியூடோன்
சங்கீத டைரக்ஷன்:
எஸ். வி. வெங்கடராமன்
எதிர்பாருங்கள்!
கவிஞன
காளிதாஸ்
THE LEO FILMS
லியோ பிலிம்ஸ், 27, மோதிலால் தெரு,... தியாகராய நகர்....... சென்னை.
studio manon's

எடுத்ததெற்கெல்லாம் என் மேல் குற்றம் சாட்டத் தொடங் கினார்கள். என் கணவருக்கு இவைகள் எல்லாம் தெரியவே தெரியாது. அதிகமாகச் சொல் லப் போனால் சோறு பானை பானையாக வடிப்போம். ஆனால் எனக்குக் கூழ்தான் ஊற்றுவார் கள். இவைகள் எல்லாம் அற்பம் என்றே நினைத்தேன். வீட்டு வேலைகள் அவ்வளவும் நானே செய்வேன். பத்துப் பண்ணை யாட்களுக்குக் கூழ் ஆக்குவது முதல் எல்லா வேலையும் என்னைச் சார்ந்ததே. தன்னோடு பேச வரவில்லை என்று என் கணவரும் கோபிப்பார்; அவர் மனத்திற்கு அமைதி ஏற்பட ஏதாகிலும் ஒரு சாக்குச் சொல்லி விடு வேன்.

இவைகளின் இடையே மற் றோர் நிகழ்ச்சியும் ஏற்பட்டு விட்டது. என் தந்தை மீது 200 ரூபாய்க் கடனுக்காக ஒரு வர் வாரண்ட் கொண்டு வந்து விட்டார். எங்கள் அப்பா தவி யாய்த் தவித்தார். வேறு வழி இல்லாமல் என்னிடம் இரகஸ்ய மாகச் சொல்லி என் கை வளை யல் இரண்டைக் கேட்டார். மணிலாக் கொட்டை விளைந்த தும் விற்றுவிட்டு நகையை மீட் டுக் கொடுப்பதாகச் சொன்னார். நானும் அவருக்கு உதவி செய் வதற்காக என் இரண்டு கை வளை யல்களையும் கழற்றிக் கொடுத் தேன். சில நாட்களில் என் நகையைப் பற்றிய செய்தி வெளிப்பட்டு விட்டது. என் மாமிக்கு ஆத்திரம் பொங்கியது. பத்திர காளியைப் போல மாறி விட்டாள். "நடந்த விஷயம் உண்மையா?" என்று கேட் டாள். நானும் உண்மைதான் என்று ஒப்புக் கொண்டதுடன் மணிலா விளைந்ததும் நகையை மீட்டுக் கொடுப்பார் என்றும் பதில் சொன்னேன். அடுத்த வினாடி என் தலைமயிரைப் பிடித் துக் கீழே தள்ளிக் காலாலும் கையாலும் உதைத்தாள். இவ் வளவுக்கும் என் கணவர் அப் பொழுது வீட்டில் இல்லை. இது விஷயமாக நான் அவருக்கு ஒரு வார்த்தை கூடச் சொன்னதே இல்லை.

தெய்வத்திற்குக் கண்ணில் லாமல் போய் விட்டது. அந்த வருஷம் மணிலாப் பயிரில் பூச்சி விழுந்துவிட்டது. ஆகவே என் தந்தையால் என் நகைகளை மீட் டுத் தரமுடியவில்லை. வருடங் களும் மூன்று ஓடி மறைந்தன.

நாளடைவில் என் வாழ்க்கை யில் சலிப்பு ஏற்பட்டது. கரைப்பவர்கள் கரைத்தால் கல் லும் கரையாதா! வரவர என் கணவருக்கும் என் மேல் அன்பு குறையத் தலைப்பட்டது. போதாத குறைக்கு மணம் ஆகி நான்கு ஆண்டுகள் ஆகியும் எனக்கு ஒரு குழந்தையும் பிறக்க வில்லை. ஆகவே எல்லோரா லும் நான் மலடிப் பட்டம் சூட் டப் பெற்றேன்.

அரசமரம் சுற்றாத நாள் இல்லை; விரதத்திற்கோ குறை

வில்லை! ஆனால் பிள்ளை வரமோ கிடைத்த பாடில்லை என்னைப் பற்றியே எனக்கு நம்பிக்கை இல்லை. வரவர என் கணவருக்கு இரண்டாவது மணம் செய்வதைப் பற்றிய பேச்சும் பலப்பட்டது. நானும் வேறு வழி இல்லாமல் அதற்குச் சம்மதித்தேன்.

ஓர் அமாவாசை இரவு. வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒருபொழுது. அடுப்பில் பால் காய்ந்து கொண்டிருந்தது. பால் பானையை இறக்குவதற்குத் துணியைப் பயன் படுத்தாமல் கைகளாலேயே இறக்கினேன். பானை என் கையைச் சுட்டு விட்டது. கையை உதறினேன். பானை கீழே விழுந்து தடால் என்று உடைந்தது. பால் கீழே பாய்ந்து ஓடியது. நான் பயத்தினால் நடு நடுங்கிப் போனேன். சப்தத்தைக் கேட்ட என் மாமி ஓடி வந்தாள். பால் பானை உடைந்து பால் கொட்டிக் கிடப்பதைக் கண்டு "அடி சண்டாளி! லட்சுமியையா கொட்டிட்டாய்?" என்று கேட்டவாறே பளார் பளார் என்று என் கன்னத்தில் அறைந்தாள். என் தலைமயிரைப் பிடித்துத் தரதர வென்று இழுத்துக் கொண்டு வந்தாள். என் மாமனாரும் என் கணவரும் ஓடிவந்தார்கள். விஷயத்தைக் கேள்விப் பட்டு அவர்கள் வேறு என்னைத் திட்டினார்கள்.

நான் எவ்வளவோ மன்றாடினேன். "வீட்டை விட்டு வெளியே நட" என்று என் மாமியார் தள்ளினார்கள். என் கணவரைப் பார்த்துத் தேம்பினேன். அவர் பொம்மையைப் போலப் பேசாமல் இருந்தார். என் மனத்திலேயே பெரிய வெறுப்பு ஏற்பட்டது. சை! கணவனுடைய அன்பு இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? என் உள்ளம் உடைந்தது. அதே நேரத்தில் இடி மின்னலுடன் மழை பெய்துகொண்டிருந்தது. என்னை அவள் அந்தக் காரிருளிலும் மழையிலும் வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டுவிட்டாள். வேறு வழி இன்றிக் கண்ணீரும் கம்பலையுமாக மழையில் நனைந்துகொண்டே என் தாய் வீடு சென்றுவிட்டேன்.

4

அடுத்த மாதமே என் கணவருக்கும் கம்பம்பட்டி மிராசுதார் கந்தசாமிப் பிள்ளையின் மகள் பூங்கோதைக்கும் திருமணம் நடைபெற்றது. அன்றெல்லாம் நான் பித்தம் பிடித்தவள் போல எங்கள் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தேன். புது மணப்பெண் சற்று வாயாடி என்றும், இருந்தாலும் கணவனுடன் ஒற்றுமையாக வாழ்வதாகவும் ஊரார் சொல்லிக் கொண்டார்கள்.

என் தாய் வீட்டிலோ வறுமை தாண்டவமாடியது. எங்களுக்கு இருக்கும் கொஞ்ச நில புலன்களில் நானும் சென்று வேலை செய்வேன். ஆயினும் நாள

டையில் என்றால் வேலையே செய்ய முடியவில்லை. கடவுளின் சித்தமே விசித்திரமானது! நான் என் மாமியார் வீட்டினின்றும் துரத்தப்பட்டபொழுது இரண்டுமாத கற்பமுற்றிருந்தேன். நாளடைவில் அது நிச்சயமாகி விட்டது. என் தாய் வீட்டிற்கு வந்த எட்டாவது மாதமே எனக்கு ஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டது!

எனக்குக் குழந்தை பிறந்ததைக் கேள்விப் பட்டு என் கணவர் உள்பட ஒருவருமே வந்து என் குழைந்தையைப் பார்க்கவில்லை. என்னுடைய நல்ல குணத்தைக் கண்ட கிராம மக்கள் எல்லோரும் எனக்காகப் பரிந்து பேசினார்கள். பலர் பேசி என்னபயன்? என் கணவர் கூடத் தன் குழந்தையைப் பார்க்க விரும்பவில்லையே!

இரண்டாண்டுகள் ஆகிவிட்டன. என் மாமிகூட இறந்துவிட்டாள். என் மாமனார் அதே வேதனையால் படுத்தபடுக்கையாகிவிட்டார். நான் என் குழந்தைக்குச் சில சமயங்கள் பால் இல்லாமல் கூழ்கரைத்து குடிக்கக் கொடுப்பேன். என் மகள் பிறந்த இன்பமே என் வாழ்க்கைப் படகை ஒரு நிலையாகச் செய்தது. இல்லையேல் இத்தனை நாட்களாக என் உடல் மண்ணிலே மறைந்திருக்கும்; அதனைக் கொண்டு பல்லாயிரம் புழுக்கள் தோன்றி யிருக்கக் கூடும்!

குழந்தை முகம் பார்த்து மகிழ்ச்சியடைவேன். அதேசமயம் பாலில்லாமல் அழுவதைக்கண்டு மனம் நொந்து கொள்வேன். என் பெற்றோர்கள் சொத்தோ நாளடைவில் கடன்காரர்களிடம் சென்று விட்டது. என் தந்தையும் தாயும் கூலிக்கு வேலை செய்தே என்னையும் என் மகளையும் காப்பாற்றினார்கள்.

ஒரு நாள் வெள்ளிகிழமை. நான் என் குழந்தையை எடுத்துக்கொண்டு மாரியம்மன் கோவில் சென்றிருந்தேன். கோவிலைச் சுற்றிக்கும்பிட்டுவிட்டுத் திரும்பினேன். எதிரிலே என் கணவரும் அவருடைய இரண்டாவது மனைவியும் வந்தார்கள். அவர்களைக் கண்டதும் என் மனத்தில் "சொரேல்" என்றது. அவர்களும் திடுக்கிட்டுவிட்டார்கள். என் குழந்தைமட்டில் கைகொட்டிச் சிரித்தது! நான் தலைகுனிந்து கொண்டே வந்துவிட்டேன். என்கண்களில் நீர் தாரை தாரையாகப்பெருகியது.

அன்றையதினம் இரவு என் கணவரும் அவர்மனைவி பூங்கோதையும் தங்கள் வீட்டுத் தாழ்வாரத்தில் தூங்கினார்களாம். இருட்டு "கருகும்" என்றிருந்ததாம். திடீரென்று "அம்மாடி" என்று அவள் கத்தினளாம். அப்பொழுது விளக்கும் அணைந்துவிட்டதாம். உடனே என் கணவர் விளக்கை ஏற்றிப்பார்த்தாராம். தன் மனைவியின் அருகே நல்ல பாம்பு ஒன்று படமெடுத்துச் சீறிக்கொண்டிருந்ததாம். அவர்மனைவியோ "ஐயோ அம்மா காலில் கடித்து விட்டதே"

என்று கதறினளாம். ஊரே திரண்டுவிட்டது.

விஷம் அவள் உடல் முழுமையும் பாய்ந்து விட்டதாம். பச்சிலை மூலிகைகள் கொடுத்துப் பார்த்தார்கள். பிடாரனை அழைத்துச் சிகிச்சை செய்தார்கள். தான் பிழைக்கமுடியாது என்று தெரிந்ததும் அவள் என்னைப் பார்க்க விரும்பினளாம்! என் கணவர் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு என்னிடம் ஓடிவந்து என்னை அழைத்தார். ஊரார்களும் பஞ்சாயத்துச் சொன்னர்கள். பிறகு மனமில்லாமல்—வெட்கத்தோடு நான் குழந்தையை எடுத்துக்கொண்டு அங்கே சென்றேன். அவள் படுத்தபடிகிடந்தாள். என்னைக் கண்டு ஆவலாக அணைத்துக் கொண்டு "அக்கா! என்னை மன்னித்துவிடு. உன் வாழ்க்கையை நான் கெடுத்தேன். குழைந்தையைக் கூடப்பாராமல் செய்து விட்டேன். அதற்குத் தண்டனையாக என்னை மாரியம்மாளே பழிவாங்கிவிட்டாள். இனி நான் பிழைக்க மாட்டேன்" என்று கூறிக்கொண்டே என் கணவர் கையையும் என் கையையும் பிடித்து "இனிமேல் நீங்கள் இணைபிரியவேண்டாம். என்னை மன்னியுங்கள்" என்று கண்ணீர் விட்டாள்.

அவள் தியாகத்தையும் முடிவையும் கண்டு நான் அழுது விட்டேன். அவள் ஆவியும் அமைதியாகப் பிரிந்தது.

இவைகள் நடந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. என் இளையாளின் தியாகமே எங்கள் வாழ்க்கையை ஒன்றாக இணைத்து இன்பமாக்கி விட்டது! ஆகவே அவள் நினைவாக என் மகளுக்கு நாங்கள் பூங்கோதை என்ற பெயர் வைத்திருக்கிறோம். நானும் என் கணவரும் உயிரும் உடலும் போல் வாழ்கிறோம். பட்டாடை உடுத்திப் பள்ளிக் கூடம் சென்றுள்ள ஆறு வயதுள்ள என் மகள் வரும் நேரமாகிறது. நீங்களே சொல்லுங்கள், உலகில் ஏன் இன்பம் இல்லை ?

(முற்றிற்று)

வருந்துகிறோம்.

செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி புதன்கிழமையன்று திரு. C. V. இராமன், B.A., LL.B., அவர்கள் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார். சினிமா உலகில் அவரைத் தெரியாதவர் யாரும் இரார். அவர் பல படங்களைத் தயார் செய்திருக்கிறார். அவருடைய குடும்பத்தினருக்கு நம் அனுதாபம் உரித்தாகுக. அவரது ஆன்மா சாந்தியுறுக!

"சந்திரனே சாட்சி!"

(கிராமவாசி)

ஆடித் திங்கள். அமாவாசைக்குப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு. இரவு பதினைந்து நாழிகை யளவில். உச்சிக்கு மேல் நீலவான் மையத்தில். ஓடும் மேகங்களுக் கிடையில், வெள்ளித் தாம்பாளத்தை ஒத்த வெண்ணிலா. வெண் கதிரொளியின் வெளிச்சம் எங்கும் பரவி வீசுகிறது.

நஞ்சை நிலங்கள் தண்ணீரால் நிறப்பப்பட்டு சாகுபடி செய்வதற்காகத் தயாராக இருக்கும் காலம். மெல்லிய அலைகள் மோதும் நீர்ப் பரப்பின்மேல் படும் நிலா ஒளியால், நஞ்சை நிலப் பரப்பு, வெள்ளித் தகடுகளால் வேயப்பட்ட பாய்கள் பரப்பியதுபோல் பளிச்சுப் பளிச்சென்று ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது. எங்கும் ஒளியும் ஒரு சில இடங்களில் உள்ள மரங்களினடியில் இருளும் உறவாடுவதுபோல் பரவி இருக்கிறதே அல்லாமல், ஒலி என்பதே ஓர் இடத்திலும் இல்லாமல் நிசப்தமாக இருக்கும் வேளை.

உழவர் இருவர். உயரமாக உள்ளவர்கள். உரங்கொண்ட தோள்களை உடையவர்கள். தோள்களில் தொங்கும் மண் வெட்டிகளோடு, தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் நோக்கத்தோடு சென்றுகொண்டிருக்கிறார்கள். மேட்டுப் பாங்கான தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஒருவர்க்கொருவர் தெரியாமல் வாய்க்காலைக் குறுக்கே அடைத்துத் தண்ணீரைத் தேக்கித் தம் தம் வயலுக்கு நீர் நேரே பாயும் வசதி செய்து கொண்டிருக்கும் நேரத்தில் இரு உழவருக்கு மிடையில் உண்டான வாக்கு வாதம் முற்றிப் பகையாக மாறி, ஒருவர் மண்வெட்டி ஒருவர் மேல்பாய, "சந்திரனே சாட்சி" என்ற சப்தம், நிசப்தமாக இருக்கும் நிலா வெளிச்சத்தில் எழுந்தது. உழவன் ஒருவன் தலை, ஒட்டிய சிறு கழுத்தோடு உருண்டது வாய்க்காலின் ஓரத்திலே. உடல் விழுந்தது வரப்பின்மேலே! உயிர் பறந்தது ஆகாயத்திலே! உடலில் வடிந்த உதிரம் வாய்க்காலின் தண்ணீரைச் செந்நீராக்கியது. கண்டான் செந்நீரை. கலங்கினான் இன உழவனைக் கொன்ற இழி குணமுடைய மறுஉழவன். நின்றால் நிச்சயம் தன்மேல் குற்றம் சாட்டப்படும் என்று பயந்து யாரும் பாராமுன் பறந்துபோய் விட்டான்.

கொலை செய்துவிட்டுக் குற்றவாளியாக ஓடும் உழவனை, சாட்சியாக அழைக்கப்பட்ட சந்திரன் கண்டு, அஞ்சி, அதிவேகமாக, அந்தரத்தில் ஓடி மேற்கு மலைச்சாரலில் மறைந்தான்.

மதியவன் மறைதலும், கதிரவன் கீழ்க்கடலில் தோன்றிக் காலை வேளைக்குக் காரணமானான்.

ஊரில் உள்ள உழவர் பலர் தங்கள் கழனிகளை உழுவதற்குக் காலையில் வந்தார்கள். மடையின் பக்கத்தில் தலையற்ற உடலைக் கண்டார்கள். திடுக்கிட்டு ஓடிக் கவனித்தார்கள். கையில் குத்தப்பட்டிருந்த பச்சையைப் பார்த்து, உழவன் "பிச்சையப்பன்" என்று அறிந்தார்கள்.

காட்டுத் தீப்போல் உழவன் வெட்டுண்ட சேதி ஊரெல்லாம் பரவியது. அதிகாரிகளுக்கு எட்டியது. அப்பொழுதே அதிகாரிகள் பிணங்கிடக்கும் ஸ்தலத்திற்குப் போனார்கள். தலையற்ற முண்டத்தைக் கண்டார்கள். தலையைக் கண்டுபிடிக்க அலைந்தார்கள். தேடிய தலையின் சிகை மாத்திரம் ஓடிடும் வாய்க்கால் ஓரத்தில், செடி ஒன்றில் சிக்கி வெளியே தென்பட்டது. சிப்பந்தி ஒருவன் சிகையதைக் கண்டு தலையதை எடுத்ததும், உடலுக்கு உரித்தான தலையது என்று உறுதி செய்தார்கள். உடலும் தலையும் உடனே பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. வெட்டினவனைக் கண்டுபிடிக்கச் சட்டப்படி உத்தரவு போட்டார்கள்.

"பிச்சையப்பன்" இறந்த சேதி கேட்டு அவன் மனைவி வருந்தாமல் இருப்பாளா? வருந்தினாள் பலநாள். மறந்தாள் பிச்சையப்பனை. தன் இன வழக்கப்படி விதவையாக இல்லாமல் வேறோர் உழவனை மறுமணம் புரிந்தாள். அதிகாரிகள் கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க அலைந்தார்கள். ஆண்டுகள் பல கழிந்தன. "பிச்சையப்பனை"க் கொன்றவன் இன்னாரென்று நிச்சயம் செய்ய இயலவில்லை.

கொலைக்குற்றம் கண்டுபிடிக்க முடியாமல் அதிகாரிகள் அலையும் சமயம். ஒருநாள் முன் இரவு. முக்கால் சந்திரன் நடுவானில் பிரகாசிக்கும் வேளை. உழவனைக் கொன்ற உழவன் தன் மனைவியோடு வீட்டு முற்றத்தில் பாய் விரித்து உல்லாசமாக மல்லாக்காகப் படுத்துக் கொண்டு வானத்தில் பிரகாசிக்கும் சந்திரனைக் கண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். "அம்மா" என்று கூப்பிட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளிருந்து ஒரு சிறுவன் ஓடி வந்தான். வந்த சிறுவன் உழவன் மனைவியை "வா உள்ளே!" என்று அழைக்க, உழவன் மனைவி உள்ளே போனாள்.

தன்னந்தனியே படுத்திருக்கும் கொலைக்கார உழவன் அந்தரத்தில் இருக்கும் சந்திரனை நோக்கினான்! சந்தோஷப்பட்டான்! வாய்விட்டுக் கேலியாகச்

சிரித்தான்! தனக்குத்தானகவே "ஏ சந்திரனே! உன்னை அந்தப் பிச்சையப்பன் பயல் "சந்திரனே சாட்சி!" என்று சொல்லிச் சாட்சியாக வைத்துச் செத்தானே, நீ சாட்சி சொன்னுயா? அதனுல் எனக்கு ஏதேனும் சங்கடம் வந்ததா? உன்னை ஒரு சாட்சியாக வைத்துச் செத்தானே! அவன் ஒரு முட்டாள் பயல்!" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

உள்ளிருந்துவந்தாள் உழவன் மனைவி. கணவன் தனியே பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டாள். புலன் ஒன்றும் புரியாமல் புருஷனை அணுகினுள். விசுவாசத்துடன் விஷயம் என்னவென்று வினவினுள். பல ஆண்டுகளாகப் பத்திரமாக வைத்திருக்கும் ரகசியத்தை மனைவியிடம் சொல்ல மனமில்லாமல் "ஒன்றுமில்லை" என்று மழுப்பினுன்.

மதியுள்ளவர்களே மனைவியிடம் மறைப்பு, மழுப்பு என்பதைக் கையாள முடியாத காரியம். ஒன்றும் தெரியாத ஏழை உழவனுலா, தன் மனைவியை ஏமாற்ற முடியும்?

"என்ன பேசினுய் தன்னந் தனியே?" என்றுள் மனைவி.

"ஒன்றுமில்லை" என்று மறு முறையும் மழுப்பினுன் உழவன்.

"உள்ளதைச் சொல்லா விட்டால் உன்னுடன் பேச மாட்டேன்" என்று நாணிக் கோணிக்கொண்டு உழவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். கணவன் கள்ள உள்ளத்தை அறிய அவனுடைய கால்களைப் பிடித்துப் பணிவிடை செய்வதுபோல் பாசாங்கு செய்தாள்.

"கண்ணே! நீ என் கால்களைப் பிடிக்கலாமா? உன் கைகள் நோகுமடி!" என்று கவலையோடு சொன்னுன் உழவன்.

"புருஷனுக்கு மனைவி கால் பிடிக்கிறதுதானே புண்ணியம்."

"ஆஹா! நீயேதான் என் உண்மையான பெண்சாதி."

"ஆமா! உண்மையான பொஞ்சாதின்னு உள்ளத்தே சொல்லமாட்டியாக்கும்?"

"என்னத்தே சொல்லச் சொல்லுறே?"

"நீ சொன்னத்தே சொல்லச் சொல்லுறேன்."

"அதுவா?" என்று விழிக்கிறுன்.

"ஆமா" என்று நொடிக்கிறுள்.

"பத்து வருஷகாலமாக, பத்திரமா வைத்திருக்கும் ரகசியமடி."

"என்ன இருந்தா என்ன மச்சான்?......எங்கிட்ட சொல்லு மச்சான்!"

"சொன்னு யாருக்கிட்டேயும் சொல்ல மாட்டியே?"

"இல்லவே இல்லே! சும்மாச் சொல்லு."

பிச்சையப்பனை வெட்டிய விபரத்தையும், அவன் சாகுந் தருவாயில் "சந்திரனே

சாட்சி'' என்றதையும் சொல்லி ''அந்த ஞாபகம் இந்தச் சந்திர னே பாத்ததும் வந்தது'' என்று சந்தோஷமாகச் சொன்னான்.

பத்து வருஷ காலமாகப் பத் திரமாக வைத்திருந்த ரகசியம் பத்துநாட் பொழுதுக்குள்ளே பரவியது ஊரெல்லாம். ஊரெல் லாம் சேதி பரவியதற்கு உழ வன் மனைவியே காரணம்.

ஊரெல்லாம் பரவிய சேதி உத்தியோகஸ்தர்களுக்குத் தெரி யாமல் இருக்குமா?

பிச்சையப்பனைக் கொன்றது உழவன்தான் என்று நிச்சயம் செய்யப்பட்டது. நிச்சயம் ஆன பிறகு நிஜம் வெளிவராதா? அந் தச் சமயமே உழவனை அதிகாரி கள் அழைத்தார்கள் சிறைச் சாலேக்கு.

சிறைச்சாலேக்கு வந்தவர் களைச் சிப்பந்திகள் சும்மா விடு வார்களா? கழனியை, உழவன் ஏர் கொண்டு உழுவதுபோல், சிப்பந்திகள் உழவனைத் தடி கொண்டு தாக்கினார்கள். தடி யின் அடியால் உண்மை தானு கவே வெளிவந்தது. உழவனும் குற்றவாளி யென்று ஒப்புக் கொண்டான். ஒப்புக்கொண்ட பிறகு விடுவார்களா அதிகாரி கள்? வழக்குத் தொடர்ந்தார் கள். உழவன் மனைவி சாட்சி யாக வரவழைக்கப் பட்டாள். உழவனுக்கு வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டது. ''சந்திரனே சாட்சி!''—வந்து பலித்தது.

பங்கிம் சந்தர் எழுதிய சந்திரசேகரில் அசோக் குமாரும் பாரதி தேவியும் நடிக்கிறார்கள். அதில் மயிர்க்கூச்செரியச் செய்யும் ஒரு காட்சி.

"ஸீஸ்டரா? மிஸ்டரா?"

(சந்தேகி)

சென்னையை விட்டு இரவு 8-50க்குப் புறப்படும் 'சிலோன்' போட்மெயிலில், பின்னால் வந்தால் இடம் கிடைக்காதென்று எண்ணி, முக்கால்மணி முன்னதாவே வந்து இருட்டாகஇருந்த ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

"சண்டை சமயத்தில் தான் விளக்கணைப்பு! யுத்தம் முடிந்தும் இன்னுமா இருட்டாக இருக்கவேண்டும்?" என்று யோசனையோடு இருக்கும் சமயம் பிரயாணத்தின்போது இரவில் சாப்பிடுவதற்காக நண்பர் சீனு வீட்டில் எனக்கு அளித்தனுப்பிய சிற்றுண்டி என் ஞாபகத்திற்கு வந்தது. இருட்டில் சாப்பிட்டால் யாரும் பார்க்க மாட்டார்கள் என்றும், இரயில் புறப்பட்டுவிட்டால், வழியில் தண்ணீர் கிடைக்காது என்றும், எண்ணிச் சிற்றுண்டிப் பொட்டலத்தைக் காலிசெய்தேன். ஆகாரத்திற்குப் பிறகு தண்ணீர் அவசியமல்லவா? "குழாயில் தண்ணீர் சாப்பிட்டு விட்டு வருகிறேன். கொஞ்சம பெட்டியையும் படுக்கையையும் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று என் எதிரில் உட்கார்ந்திருந்த நபர் ஒருவரிடம் சொல்லிவிட்டு இறங்கிப் போய், "பிளாட்பாரம்" குழாயில் தண்ணீர் சாப்பிட்டுவிட்டு வந்து "த்தாங்ஸ்" என்று வந்தனம் செலுத்திவிட்டு, என் இடத்தில் அமர்ந்தேன்.

உடனே வண்டிகளுக்கு விளக்குகள் போடப்பட்டு, இருள் நீங்கி வெளிச்சம் உண்டானது. என்முன் இருக்கும் நபரோடு கூட ஏதாவது பேச எண்ணி, முகத்தைக் கவனித்தேன். கழுத்து வரையில் தொங்கவிட்டுக் கத்திரிக்கப்பட்ட தலைமயிர் (bobbed hair). மூக்கில் கண்ணாடி! உடம்பில் வெள்ளை ஷர்ட்டு! இடையில் கறுப்பான கால்சட்டை! இவைகளை அணிந்திருந்தார் என் முன் இருந்த நபர். வயது இருபதுக்குமேல் இராது. ஒரு விதமான மருவும் இல்லாத, உருண்டை முகம்! நீண்ட மூக்கு! பெருத்த விழிகள்! புருவமோ, எழுதியது போல் அடி அகன்று நுனி குறுகிக் கூர்மையாக அமைக்கப்பட்டிருந்தது. மூக்கும் கண்ணும் இருந்ததற்குப் புருவந்தான் பொருத்தமில்லாமல் இருந்தது. இதை எண்ணிக்கொண்டே புருவங்களைக் கவனித்தேன். அடர்ந்திருந்த புருவங்கள் அம்பட்டனர் வேலையால் அப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிந்து கொண்டேன். இத்துடன் இருக்கும் நபர் பத்திரிகையொன்றைத் தன் நெஞ்சுக்கு நேரே

These Equipments are the
First Choice Everywhere
RCA-SIMPLEX Theatre EQUIPMENT is not only the CHOICE but the Fashion among discriminating Theatre-Owners and patrons alike -
Whether its Sound Recording or Reproducing Equipments or Public Address System,-with the RCA Hall-mark, these equipments are the first and final choice of everyone. That's why all de-luxe theatres instal RCA Equipments.
RCA RECORDERS- for flawless Sound-Recording. New Models, the PM 45 and PM 49, have come for India's New Pictures.
now available ex-stock
Other RCA Products include Public Address System. The TELEKOM inter - communication system for RADIOS ETC.
RCA
The Hall-mark of Quality in Sound Equipments
Sole Concessionaires for India, Burma & Ceylon:
PHOTOPHONE EQUIPMENTS LIMITED
9, MARINE LINES, BOMBAY.

பிடித்துப் படித்துக்கொண்டும் இருந்தார். ஆளைப் பார்த்தால் ஆணா பெண்ணா என்ற ஐயமும் எனக்கு எழுந்தது! "நபரை என்ன சொல்லிக் கூப்பிடுகிறது," என்ற சந்தேகம் பிறந்தது! பேசினால் குரலைக்கொண்டு கண்டு பிடித்து விடலாமென்று, "அது என்ன பேப்பர்?" என்று தந்திரமாகக் கேட்டேன். பதில் ஒன்றும் சொல்லாமல் பத்திரிகையின் ஒரு பகுதியை எடுத்து எனக்கு அளித்தார். இதனால் நான் எண்ணியது பலிக்காமல் பத்திரிகையை வாங்கிப் படிப்பதுபோல் பார்த்துக்கொண்டு நபரை 'ஆணா? பெண்ணா?' எனக் கண்டு பிடிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தினேன். குறிப்பிட்ட நேரத்தில் வண்டியும் புறப்பட்டது. எதிரில் இருந்த நபரும் காற்று வாங்கும் பொருட்டுத் தன் 'ஷர்ட்டின்' மேல் பொத்தானைக்கழற்றிக் காலரை விலக்கினர். கழுத்தில் 'பளிச் சென்று' ஒரு சங்கிலி தென்பட்டது. சங்கிலியைக் கண்டவுடன் ஆண் என்ற சந்தேகம் அப்பொழுதே அகன்றது. "இனிச் சந்தேகமில்லை. இவர் பெண்தான்!" அதனால் "ஸிஸ்டர்" என்றே கூப்பிடலாம் என்று முடிவுசெய்து கூப்பிட வாயை எடுக்கும்போது, 'இக் காலத்தில் ஆண்களுந்தான் கழுத்தில் சங்கிலி அணிகிறார்களே," என்று பெரிய சந்தேகம் பிறந்தது எனக்கு. இந்தச் சந்தேகத்திலேயே சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, வண்டியும் 'தாம்பரம்' ஸ்டேஷனுக்கு வந்து நின்றது. வண்டியில் இருந்த எல்லோரும் குப்புற விழும்படி குலுக்கப்பட்டார்கள். இதனால் எதிரில் இருந்த நபரும் நானும் மோதிக் கொள்ளப் பார்த்தோம்.

ஓடிய வண்டி நின்றதும், காற்றும் நின்றது. புழுக்கமும் அதிகரித்தது. வெப்பம் தாங்க முடியாமல் தன் ஷர்ட்டின் நுனியைப்பிடித்து விலக்கிக்கொண்டு பத்திரிகையை மடித்து காற்று கழுத்தின் வழியாக, மார்பில் படும்படி வீசிக் கொண்டிருந்தார், எதிரில் இருக்கும் நபர். "ஷர்ட்டின் இரண்டாவது பொத்தானையும் கழற்றி விட்டு, விசிறிக்கொள்ளமாட்டாரா!" என்ற எண்ணத்தோடு இருந்தேன். நான் எண்ணியது பலித்தது. நபரும் தன் ஷர்ட்டின் இரண்டாவது பொத்தானையும் மெல்லக் கழற்றிவிட்டு மார்பெல்லாம் காற்று விழும்படி விசிறிக் கொண்டிருந்தார். மெல்ல ஜாடையாகக் கவனித்தேன் நானும். "உள்பாடி" கொஞ்சம் தெரிந்தது. பெண்தான் என்று எண்ணி உறுதிசெய்து நிமிர்ந்து உட்கார்ந்து கனைத்துக்கொண்டு "ஸிஸ்டர்" என்று கூப்பிட ஆரம்பிக்கும் சமயம் என் உள்ளத்திலிருந்து ஒரு சந்தேகம் வந்தது. அப்படியே வாய் அடைத்து விட்டது. "இந்தக் காலத்தில் ஆடவருந்தான் "உள்பாடி" போடுகிறார்களே!" என்று இன்னும் பெரிய சந்தேகம்எழுந்

தது என் சிந்தையில். வண்டியும் தாம்பரத்தை விட்டுப் புறப்பட்டது. கொஞ்ச நேரத்தில் நபர் தன் காலை எடுத்து பெஞ்சியின்மேல் வைத்தார்.

"காலில் 'லேடிஸ் ஷூஸ்' இல்லையே! ஆடவர்போல் 'ஹாப் ஷூஸ்' அல்லவா போட்டிருக்கிறார். ஆகையால் இவர் நிச்சயமாக ஆடவர்தான்" என்று எண்ணி என்னை திடம் செய்து கொண்டு "மிஸ்டர்" என்று அழைக்கவே முடிவு செய்து விட்டேன். செங்கல்பட்டு ஸ்டேஷனை நெருங்கியது வண்டி. 'சிலு சிலு' வென்று குளிர் காற்று வந்து கொண்டிருந்தது. வண்டிக்குள்ளே சிகரட்டு ஒன்றை எடுத்துச் சீக்கிரமாக பற்ற வைத்தார். 'பூட்ஸையும்' புகைப் பிடிப்பையும் கண்டவுடன் "இவர் ஆடவர் என்பதற்கு ஐயமில்லை" என்று ஒருவாறு முடிவு செய்து தைரியமாக "மிஸ்டர்! தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று திடமாகவே கேட்டேன். பதில் ஒன்றும் இல்லாமல் மௌனமாகவே இருந்தார் நம் நபர். காது செவிடென்று "மிஸ்டர்! உங்களைத்தானே! எங்கே போகிறீர்கள்?" என்று உரத்த குரலில் கையால் சமிக்கை செய்து கேட்டேன் நான். பதில் இல்லை. "ஓஹோ! ஒருசமயம் நம் நபர் ஊமையாக இருப்பாரோ!" என்று ஆழ்ந்து யோசிக்கலானேன். அதற்குள் வண்டியும் செங்கல்பட்டு ஸ்டேஷன் வந்து நின்றது.

தன்னுடைய சின்னப்பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டு இறங்கினார் நபர். நானும் என்னுடைய சாமான்களையும் எடுத்துகொண்டு இறங்கினேன் அவரோடு கூடவே.

"ஹலோ! லக்ஷ்மி!" என்று சொல்லித் தலையில் பனிக்காகக் கட்டிய 'மப்ளரோடு' நம்நபரைக் கட்டிக் கொண்டாள், ஒரு நாகரீகமான பெண். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன் எதிரில் நின்ற இருவரையும் நான்.

"ஆ! அண்ணா! நீயும் இந்த வண்டியில்தான் வருகிறாயா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் என் தங்கை 'ஜானகி!'

"ஆமா! அது யார்?" என்று நாணத்தோடு கேட்டேன் நான்.

"காலேஜ் ஸ்டுடெண்ட், என் 'கிளாஸ் மேட்' 'வெக்கேஷனுக்கு' வருவாள் என்றேனே அவள்தான் இவள். இவள்தான் லக்ஷ்மி!" என்றாள் என் தங்கை ஜானகி. அவ்வளவு தான்! என் நிலைமை என்னவிதம் இருந்திருக்கும் என்பதை நீங்களே எண்ணிக்கொள்ளுங்கள். "ஜானகி! இவர்தான் உன் அண்ணாவா?" என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டாள் லக்ஷ்மி. கேட்டதும் என்னை மீறிக் கொண்டு எழுந்தது சிரிப்பு! நான் சிரித்ததும் லக்ஷ்மியும் என்னுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்தாள். ஓயாமல் இருவரும் மாறி மாறிச்சிரித்தோம்.

தியாகி

"தியாகி" என்ற படத்தின் கதை புத்தக ரூபத்தில் வெளிவந்திருந்தால் பலமக்கள் அதைப் படித்து ரசித்திருக்கக்கூடும். ஆனால், வெள்ளித் திரையில் பார்த்தபோது கதை அவ்வளவாக மக்கள் மனத்தைக் கவர்ந்திருக்க முடியாது என்ற எண்ணம் ஏற்பட்டது. தற்காலப் பட முதலாளிகள் சம்பந்தமற்ற காட்சிகளை ஒன்றாகச் சேர்த்துப் படம் பிடிப்பது வழக்கமாகிவிட்டது. இந்த வழக்கத்திற்கு "தியாகி"யை ஒரு நல்ல உதாரணமாகக் கூறலாம். அந்தப் படத்தில் "ஸ்டண்ட்" காட்சிகள், கதாநாயகனும், கதாநாயகியும் படகில் செல்லும் காட்சி, கத்திச் சண்டை, ஆலயப்பிரவேசம், முடியரசனே ஹரிஜனப் பெண்ணை மணம் புரிந்துகொண்டு தன் நாட்டில் குடியரசை நிறுவும் காட்சி, இவ்வாறாகப் பலசம்பந்தமற்ற காட்சிகள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப் படம் ஒரே கதம்பமாக விளங்குகிறது. இந்தக் காட்சிகளை ஒன்றாகச் சேர்ப்பதற்குத்தான் கதைஎழுதப்பட்டது போலிருக்கிறது.

தேசப் படத்தையும், தேசத் தலைவர்களின் படத்தையும் திரையிற் காட்டி, அவற்றைப் பற்றிப் பாட்டுப் பாடி மக்கள் மனத்தைக் கவர்ந்து அதன் மூலம் படத்தை வெற்றிகரமாக ஓட்ட வேண்டுமென்று பட முதலாளிகள் நினைக்கிறார்கள். மக்கள் ஏமாந்திருக்கும் வரையில் தான் இந்தச் சூழ்ச்சிகள் வெற்றி பெறும். ஆனால் பொது மக்கள் இப்போது விழித்துக் கொண்டார்கள். இனி அவர்களை ஏமாற்ற நினைப்பது அவ்வளவாக அறிவுடைமையாகாது என்று தான் நாம் கூறலாம்.

ஒரு சிறிய ஊரில் ஒரு சிறிய அரசன். அவன் இளைஞனாக இருப்பதால் மந்திரியே அரசாங்க அலுவல்களை நடத்துகிறான். மந்திரி ஸ்திரீலோலனாகவும், கொடுங்கோலனாகவுமிருக்கிறான். மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கும் ஒரு சாமியார். சாமியாருக்குத் துணையாக ஒரு ஹரிஜன ஆசிரியை. அழகும் இளமையும் உடையவள். ஹிந்து சமுதாயத்தில் ஹரிஜனங்களுக்கு வழக்கமாய் ஏற்படும் துன்பங்கள் அந்த ஊர் ஹரிஜனங்களுக்கும் ஏற்படுகின்றன. அவர்களுக்கும் சாமியார் தான் ஆறுதல் கூறுகிறார். ஆகவே, சாமியார் சாத்வீக முறையில் அரசியலிலும், சமூகத்திலும் புரட்சி செய்யப் பார்க்கிறார். பொதுமக்கள் மந்திரியின் அட்டூழியங்களால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் ஹரிஜனங்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். இந்தச் சமயத்தில் படிப்பதற்

காக வெளிநாட்டுக்குப் போயிருந்த இளவரசன் திரும்புகிறான். மந்திரியின் கொடுமையைத் தெரிந்து கொள்வதோடு, ஹரிஜன ஆசிரியை மேலும் காதல் கொள்கிறான். அதன் பின் எல்லாம் வழக்கம்போல் சுபிட்சமாகவே முடிகிறது. மந்திரி வீழ்த்தப்படுகிறான். நாட்டில் குடியரசு ஸ்தாபிக்கப்படுகிறது. ஹரிஜனப்பெண்ணை அரசன் மணந்து கொள்கிறான்.

படத்தில் அசம்பாவிதமான சம்பவங்கள் மலிந்து கிடக்கின்றன. ராஜ்யத்தில் ஐந்தே சிப்பாய்களிருக்கிறார்கள். கலகக்காரர்கள் வேண்டும்போது அரண்மனைக்குள்ளும், சிறைச்சாலைக்குள்ளும் நுழைய முடிகிறது. மந்திரி டையும் காலரும் கட்டிக்கொண்டிருக்கிறான். ஆனால் சேவகனைக் கை தட்டித்தான் கூப்பிடுகிறான். கத்திச் சண்டை பலமாக நடக்கிறது. ஆனால் சண்டை போடுபவர்கள் முகத்தில் கோபமோ களைப்போ தோன்றுவதே யில்லை. கத்திச் சண்டையும், மல் யுத்தமும் முடிந்தபிறகு, ஒரு ரிவால்வரும் வெளி வருகிறது. இத்தகைய பொருத்தமற்ற சம்பவங்களே படத்தில் நிறைந்து கிடக்கின்றன.

கதைதான் மோசமானதென்றால், படப்பிடிப்பும், ஒலிப் பதிவும் அதைவிட மோசமாக இருக்கின்றன. இந்தப் படத்திற்கென்றே "டெக்னீஷியன்களை"த் தேர்ந்தெடுத்தாற்போலிருக்கிறது.

இதுவும் மாயாதேவி யின் படந்தான்

"டைரக்ஷன்" மிக மட்டம். நல்ல டைரக்டராயிருந்தால் ஒரு சில இடங்களிலாவது உணர்ச்சியூட்டக்கூடிய கட்டங்கள் படத்தில் இருந்திருக்கும். ஆலயப் பிரவேசம், பிரஜா உரிமைக்காகப் போராடல், முதலிய பல முக்கியமான—மக்கள் வாழ்க்கையின் அடிப்படையான—பிரச்சினைகளைப் படத்தில் புகுத்தியுங்கூட ஓரிடத்திலாவது உணர்ச்சியூட்டாமல் ஓடக்கூடிய படத்தைத் தயார் செய்த டைரக்டர் கற்பனா சக்தியே கடுகளவும் இல்லாதவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

கதையும் டைரக்ஷனும் மோசமா யிருப்பது போலவே நடிப்பும் மோசமா யிருப்பதுதான் இந்தப் படத்தின் அலாதியான பெருமை.

மந்திரியின் வேலைக்காரனாகிய "ஆனந்தனுடைய" நடிப்பு நன்றாயிருக்கிறது. மற்றவர்களுடைய நடிப்பைப் பற்றி ஒன்றும் பேசாமலிருப்பதுதான் உத்தமம்.

பாட்டுகளில் ஒன்றாவது ரசிக்கக்கூடியதாயில்லை.

இவ்வாறு பல வகைகளிலும் மோசமான ஒரு படத்திற்கு ஸ்டுடியோக்காரர்களின் புத்தி சாலித்தனமான உதவியாவது இருந்திருந்தால் ஓரளவு நன்றாயிருந்திருக்கும். ஆனால் படத்தின் தோல்விக்கு ஸ்டுடியோக்காரர்களே பெரும்பாலும் பாடுபட்டிருக்கிறார்கள்.

இந்தக் கதை ஒரு நல்ல டைரக்டர் கையில் கிடைத்திருந்தால் ஒருவாறு பயன்படக்கூடிய படத்தைத் தயார் செய்திருக்கலாம். இப்போது கூடப் படத்தில் சில மாறுதல்களைச் செய்து திரையிட்டால் படத்தின் அசம்பாவிதம் ஓரளவு குறையும். உதாரணமாக, குதிரைச் சவாரிக் காட்சி, கத்திச் சண்டைக் காட்சி, மந்திரி பத்மாவை கற்பழிக்க முயலும் காட்சி முதலியவற்றை மிகவும் சுருக்கிக் காட்டலாம். சாமியாரை மந்திரி அடிக்கும்போது சாட்டை கால்களின்மேல் விழுகிறது. ஆனால் "குளோஸ்-அப்"பில் அதன் குறிகள் கைகளில் தெரிகின்றன. இந்த அசம்பாவிதத்தைக் காட்டாமலிருக்கலாம். பட்டரின் மனைவிக்குப் பாட்டுப் பாட ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று புகுத்தப் பட்டிருக்கும் பொருத்தமற்ற காட்சியை நீக்கிவிடலாம்.

இப்போதிருக்கும் நிலைமையில் படம்மிக மட்டமான படந்தான் என்று சொல்லாமலிருக்க முடியாது.

முதலாளியும் தொழிலாளியும் ஒத்துழைத்தால்தான் கைத்தொழில் முன்னேற்றமடையும் என்ற கருத்தை விளக்கும் 'ஜான்ஜீர்' என்ற படத்தில் இது ஒரு காட்சி

என்ன சேதி?

ஜெமினி ஸ்டுடியோ, சென்னை.

"மிஸ் மாலினி" என்னும் தமிழ் சமூகப்படம் 26-ஆம் தேதி முதல் சென்னையிலும் இன்னும் பல ஊர்களிலும் ஓடுகிறது.

"சந்திரலேகா" மூன்று மொழிகளில் முடிந்துவிட்டதாம். கத்திரிக்கோலுக்கிடையில் சித்திரம் செய்யப்படுகிறதாம்.

"ஜெமினி ஞானசௌந்தரியில்" நடிக்கும் பி. கண்ணாம்பா, "சிட்டடெல் பிலிம்ஸ் கார்ப்பரேஷன்" பிக்சரில் நடிக்கும் எம். வி. ராஜம்மாளை முந்துகிறாராம்.

கே. பி. சுந்தராம்பாள் நடிக்கும் "ஔவையின்" படத்தை ஒரு சரித்திர அத்தாட்சிப் படமாக எடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்களாம்.

நாட்டியமே உருவாக இருக்கும் "கல்பனா" படம் முடிந்து உலகத்தில்பல இடங்களில் காட்டப்படுவதற்கு, அன்னிய நாடுகளுடன் பேச்சு வார்த்தை நடக்கிறதாம்.

"கோரக் கும்பர்," "விந்திய ராணி," இவ்விரு படப்பிடிப்புகளும் வெகு விரைவாகவே நடக்கின்றனவாம்.

நியூட்டோன் ஸ்டுடியோ,

சென்னை

"பைத்தியக்காரன்" படம் முடிந்து சென்னையில் "சாகரிலும்" இன்னும் பல ஊர்களிலும் ஓடுகிறது.

"மதனமாலா" என்ற தமிழ்ப்படம் மெதுவாக சந்தர்ப்பம் கிடைக்கும்போது செட்டில் புகுந்து வளருகிறதாம்.

"ஆர்ட் டைரக்டர்" மிஸ்டர் நகூர் தன்னுடைய "ஞான சௌந்தரியை" "ஜெமினி ஞான சௌந்தரி"க்கு முன்னால் வெளியிட்டு விடவேண்டுமென்று இரவும் பகலும் வேலை செய்கிறாராம்.

"உமா பிக்சர்ஸ்" "என். எஸ். கே" இருவரும் சேர்ந்து "மணமகள்" என்ற சமூகப் படத்தை எடுக்கிறார்களாம். இதில் கிருஷ்ணனுடைய "கிந்தனார்" கதையையும், சில அரசியல் விஷயங்களையும் புகுத்த எண்ணுகிறார்களாம். அப்படிப் புகுத்தப்பட்டால் "மண மகள்" என்ற பெயர் மாறிவிடும் போலிருக்கிறதாம்.

படத்தொழிலில் நீண்டகாலமாக அனுபவமுள்ள மதுரை

"முருகன் டாக்கீஸாரின்" "ரத்தின குமாரும்" இன்னும் இரண்டு மூன்று செட்டுகளோடு முடிந்துவிடுமாம்.

சோபனச்சலா ஸ்டுடியோ, சென்னை

டி. பி. சுந்தரம் அவர்களுடைய "மகாத்மா உதங்கர்" முடிவடைந்து சென்ஸாருக்குத் தயாராக இருக்கிறது. படம் பல வகையிலும் சிறந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டி. கே. பட்டம்மாளுடைய கர்ணாமிர்தமான கானம் படத்திற்கு மிகுந்த வெற்றியை அளிக்கும். அஞ்சலி தேவி, சூடாமணி, பேபி கமலா, கோபிநாத் ஆகியவர்களுடைய நாட்டியங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றனவாம். விஜய குமாரி, கொத்தமங்கலம் சீனு, இராமச்சந்திரன் முதலிய சிறந்த நடிகர்கள் இதில் நடிக்கிறார்கள். பட்டு ஐயர் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார்.

இந்தப்படத்தைப் பார்த்தவர்கள் சிலர் இது 1947-ஆம் வருஷத்தின் ஓர் ஒப்பற்ற படமாக இருக்குமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஜி. பி. நாராயணன் கம்பனியார் எடுக்கும் "கங்கணம்" என்னும் தமிழ்ப்படத்தை அக்டோபர் மாதம் முதல் வாரத்திலேயே காட்டிவிட வேண்டுமென்று "கங்கணம்" கட்டிக்கொண்டு வேலை செய்திருக்கிறார்களாம்.

ஸ்ரீ கண்ணா பில்ம்ஸாரின் "திருமழிசையாழ்வார்" திரைக்குத் தயாராகிறது. தண்டபாணி தேசிகரின் பாட்டுக்கள் படத்தை ஓர் இனிய சங்கீதப் படமாகச் செய்திருக்கின்றனவாம்.

ப்ரகதி ஸ்டுடியோ, சென்னை.

கே. ஆர். ராமசாமி, பாலையா, பானுமதி இவர்களை முதன்மையாகக் கொண்டே "ராஜயோகியை" எடுக்க மும்முரமாக வேலையை ஆரம்பிக்கிறார்களாம்.

"கன்னட கபீர் தாஸ்" முடிந்து திரைக்குத் தயாராக இருக்கிறது.

கந்தன் கம்பெனியார் தங்கள் "ஜீவகன்" வளர்ச்சியிலேயே, சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தெலுங்கு தேசத்தின் கதையை "பக்தஜனா" என்ற பெயரில் தமிழ் மொழியில் எடுக்கிறார்கள். அதில் "சாந்த குமாரி," "நாகையா" என்ற ஆந்திர நடிகர்கள் நடிக்கிறார்கள்.

ஏ. ஆர். பி. அய்யர் தன் சொந்த சிருஷ்டியான "வத்சலா கல்யாணத்தை" விரைவில் திரையிட வேகமாக வேலை செய்கிறாராம். இதில் பி. எஸ். கோவிந்தன், டி. கே. சம்பங்கி முதன்மை நடிகர்களாம்.

கே. ஆர். ராமசாமி, ஏ. ஆர். சகுந்தலா நடிக்கும் முபாரக்

"பில்ஹணன்" போட்டி போட்டுக் கொண்டு செட்டுகளில் புகுந்து வெளிக்கிளம்புகிறதாம்.

"ஸ்டார் கம்பைன்ஸ்" "ப்ரகதி ஸ்டூடியோவின்" கூட்டுறவில் எடுக்கும் தமிழ் "சம்சார நௌகா" வின் படப்பிடிப்பு இரவு பகலாக நடக்கிறதாம். இந்த "சம்சார நௌகா" கன்னடத்தில் நாடகமாகவும், படமாகவும் நடத்தப்பட்டபோது அவைகளில் நடித்த அதே பி. ஆர். பந்துலுவே இதிலும் நடிக்கிறார். அந்தக் கன்னடப் படத்திற்கு உண்டான புகழ், இந்தத் தமிழ் "சம்சார நௌகா" வுக்குக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

"கங்கணத்தை" முடித்துக் கொண்டு மேனகா மின்மினியின் செட்டில் மின்னிக்கொண்டிருக்கிறாராம். "மின்மினி" என்னும் படம் "பேசும்படம்" ஆசிரியர் ராம்நாத் அவர்களின் சொந்தத் தயாரிப்புதான். அவர் நீண்ட காலம் "பேசும் படத்தில்" ஈடுபட்டிருப்பதால் "மின்மினி" படத்தின் தன்மையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

நேப்டியூன் ஸ்டூடியோ, சென்னை.

இந்த ஸ்டூடியோவில் உயர்தரமான கேமராக்களும், ரிகார்ட்டிங் மெஷின்களும் நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி அமைக்கப்பட்டிருக்கும் "லாபரட்டரியில்" எந்நேரத்திலும், எந்த வேலையும் செய்து கொள்ளலாம். இதில் எடுக்கப்படும் படங்கள் அநேகம்.

சந்திரா ஆர்ட்ஸ் ஸ்டூடியோ, சென்னை

"சீராளா" என்னும் தெலுங்குப் படத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

"மஹாபலி" ஆரம்பித்தது முதல் தொடர்ந்து எடுத்திருந்தால் இதுவரையில் "மஹாபலி" திக்விஜயம் செய்திருப்பார். ஆனல் ஏதோ அசந்தர்ப்பத்தால் கொஞ்சம் அசதியாக இருக்கிறார்.

சத்ரபதி பிக்சர்ஸ் "ரதிகா" என்ற தெலுங்குப் படம் ஒன்றை ஸ்டூடியோவின் கூட்டுறவில் எடுக்கிறார்கள்.

கிரன் கம்பனியார் எடுக்கும் "கோகுல தாஸி" என்னும் தமிழ் புராணப் படம், பாதி வரையில் முடிந்திருக்கிறதாம்.

குகன் பிக்சர்ஸ் எடுக்கும் "ஜம்பம்" என்ற தமிழ் சமூகப் படம் முடிந்து திரைக்குத் தயாராக இருக்கிறதாம். படத்தைப் பார்த்தால் விடாமல் சிரிப்புத்தானும்! "ஜம்பம்" என்றாலே எல்லோருக்கும் சிரிக்க இடந்தரக் கூடியதுதானே!

ஷோர்டி ஸ்டூடியோ, சென்னை

பாலாஜி எடுக்கும் "கிருஷ்ண துலாபாரமும்" "நவீன வள்ளியும்" ஏறக்குறைய முடிந்து விட்டன. பழமையும், புதுமையும் கலந்தே படங்கள் அமைந்

திருக்கின்றனவாம். இதற்குப் பிறகு "மதுரை வீரன்" செட்டில் புகுந்து தன் வீரத்தைக் காட்டுவானும்!

"தேவதாசி" என்ற தமிழ்ப் படம் முடிந்து தீபாவளிக்கு வெளிவரத் தயாராயிருக்கிறதாம்.

மதுரையிலிருந்து ஒரு பார்ட்டியார் வந்து "விஸ்வாமித்திரர்" படத்தை, "டைரக்ஷன்" செய்த மிஸ்டர் ஜெகநாத் அவர்களைக்கொண்டு "திருமலை நாயக்கர்" என்னும் மதுரை மன்னன் சரித்திரத்தைப் படம் எடுக்கப் பேசுகிறார்களாம். கதை வசனத்திற்கு டி. எம் யூ. பதி என்பவரைக்கலந்து பேசுகிறார்களாம். முடிந்தால் அப்படம் இந்த ஸ்டூடியோவில்தான் எடுப்பார்களாம்.

ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோ, சென்னை

ஸ்டூடியோவின் வேலைகள் பூராவும் முடிந்து மின்சார வசதியும் கிடைத்து விட்டதாம். இன்னும் ஒரு மாதத்தில் வேலை ஆரம்பிக்கப்படுமாம். முதலில் ஒரு சமூகப்படம் அல்லது சமூகத்தைத் தழுவிய சரித்திரக் கதையை எடுப்பதென்று முடிவு செய்திருக்கிறார்களாம். கதை வசனத்திற்கு டி. எம். யூ. பதியையும், டைரக்ஷனுக்கு ஒரு கைதேர்ந்த ஆந்திரரையும் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்களாம்.

கணேஷ் ஸ்டூடியோ, சென்னை

இது பழைய "ப்ரகதி ஸ்டூடியோ". பங்காளி சிவஞ் செட்டியாரின் சொந்த ஸ்டூடியோ. இதுவும் பூர்த்தியாகிப் படம் எடுக்கப்படும் நிலைமையில் இருக்கிறதாம். இதற்கும் பட முதலாளிகள் வரவேற்கப் படுகிறார்களாம். முதலில் சொந்தப்படம் எடுப்பதா? அல்லது வெளிப் படம் எடுப்பதா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் இன்னும் ஸ்டூடியோக்கள்

"ரேணுகா" ஸ்டூடியோ, "வாஹினி" ஸ்டூடியோ, "நரசு" ஸ்டூடியோ என்று இன்னும் பல ஸ்டூடியோக்கள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. இப்போதெல்லாம் 8-மணிநேரப் படப் பிடிப்புக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த ஸ்டூடியோக்கள் வேலை செய்ய ஆரம்பித்தால் ஸ்டூடியோ வாடகை மிகவும் குறைந்து விடும்.

நவஜோதி ஸ்டூடியோ, மைசூர்

இங்குதான் சஞ்சீவியார் எடுக்கும் "மனோரமா" என்னும் தமிழ்ப் படம் வளர்கிறது.

சுதர்சன் டிரேடிங் கம்பனியார் "சிகாமணி" என்னும் ஒரு தமிழ் சமூகப்படத்தை எடுக்கிறார்கள். நடிகராக இருந்த வி. எஸ். மணி இதில் மெல்ல டைரக்டராகிறார் என்கிறார்கள்.

"சாரியாரின்" "காளிதாஸி" என்னும் தமிழ்ப் படமும் அங்கு தான் எடுக்கப்படுகிறது.

தமிழருக்கு ஒரு "தேவதாசி" ஏற்படும்போது கன்னடியருக்கு ஒரு "தேவதாசி" வேண்டாமா? அதற்காகத்தான் இங்கும் ஒரு "தேவதாசி" கன்னட மொழியில் உண்டாக்குகிறார்களாம்.

"சதி துளசி" என்னும் ஒரு படத்தை தமிழ், கன்னடம் இரண்டு மொழிகளிலும் பேச வைத்துப் பிடிக்கிறார்களாம்.

சென்ட்ரல் ஸ்டுடியோ, கோவை

டி. கே. எஸ். சகோதரர்கள் "பில்ஹணன்" முடிந்து விட்டதென்றும், அதில் ஷண்முகம் பிரமாதமாக நடித்திருக்கிறாரென்றும் கேள்வி. சென்ட்ரல் ஸ்டுடியோவில் "வீர அபிமன்யு," "கம்சன்," "கிருஷ்ண விஜயம்" "விப்ரநாராயணன்" முதலிய படங்களை விரைவில் முடிப்பதற்காக சோமு அல்லும் பகலும் உழைக்கிறார். ராயல் டாக்கிஸாரின் "சுதர்ஸன்" சீக்கிரம் முடிவதற்காக ஜூபிடர் பிக்சர்ஸார் பட முதலாளியோடு ஒத்துழைக்கிறார்கள்.

பக்ஷிராஜா ஸ்டுடியோ, கோவை

"பேசாமடந்தை" பக்ஷிராஜா ஸ்டுடியோவில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஸ்டுடியோவின் சொந்தப் படமாகிய "கன்னிகா" என்னும் படம் M.S. சரோஜினியின் நடிப்பையும், ஸ்ரீராமுலு நாயுடு அவர்களின் டைரக்ஷனையும் பெற்றுத் தயாராகிக் கொண்டிருக்கிறது.

மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்

இந்த ஸ்டுடியோவின் சொந்தப் படமாகிய "தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யின் படப்பிடிப்பு பூராவும் முடிந்து திரைக்குத் தயாராக இருக்கிறதாம். டி. ஆர். ராஜகுமாரிக்கு "மனோன்மணியில்" நல்ல பெயர்வாங்கிக் கொடுத்த டைரக்டர் மிஸ்டர் டி. ஆர். சுந்தரம் "தலை வாங்கி அபூர்வ சிந்தாமணியில்" பி. எஸ். கோவிந்தனுக்கும் புகழைத் தேடிக்கொடுத்து விடுவார் என்பதில் சந்தேகமில்லை.

"நிர்மலா" ஒரு மலையாளப் படம். இதுவும் மேற்படி ஸ்டுடியோவில் தயாராகிறது.

"ஆண்டாள்" "மாரியம்மன்" என்னும் இரண்டு படங்களும் எம். எஸ். விஜயாள் நடிக்கும் "ஷண்பகவல்லி"யும் "பிழைக்கும் வழி" என்ற இந்தக்காலத்திற்குப் பொருத்தமான சமூகப் படமும் எடுக்கிறார்களாம்.

சித்திரகலா மூவிடோன், மதுரை

ஸ்டுடியோவில் ஏற்பட்ட நிர்வாக ஊழல்களை முன்னிட்டுச் சில உத்தியோகஸ்தர்களை நிர்வாகத்திலிருந்து விலக்கி விட்டார்களாம். இனிமேலாவது பொறுப்புள்ளவர்களைப் போட்டு நல்ல படங்களைத் தயார்செய்து வெளியிடுவார்களென்று நம்புகிறோம். மானேஜிங் டைரக்டர் எல்லோரையும் நம்பும் சுபாவம் படைத்தவர். அவர் நம்பினதில் நஷ்டமில்லை. ஏமாற்றும் எண்ணம் உள்ளவர்கள் தான் ஏமாந்து ஏளனத்திற்கு ஆளாணர்கள்.

Edited and Published by P. D. Thambi, Netaji Subhas Chandra Bose Road, Madras—Q. H. No. MS. 36 and Printed by K. N. Desikan at the Madras Publishing House (1945) Ltd.—(MS. 9)—Madras.

வருகிறது! எதிர்பாருங்கள்!

டாக்-ஏ-டோன்

(ஆங்கில மாத வெளியீடு)

தீபாவளி வெளியீடு

நவம்பர் 10-ஆம் தேதி வெளிவரும்.

- சினிமா நட்சத்திரங்களின் மூவர்ணப் படங்கள்.
- பெயர் பெற்ற ஆசிரியர்களின் கட்டுரைகள்.
- சிறு கதைகள்.
- சினிமாவைப் பற்றிய விசேஷச் செய்திகள்.

சென்ற ஆண்டு தீபாவளி மலர் பல
பத்திரிகைகளாலும், பொது
மக்களாலும் போற்
றப்பட்டது.

விளம்பர விகிதங்களுக்குக் கீழ்கண்ட விலாசத்திற்கு
எழுதவும் :—

டாக் - ஏ - டோன் காரியாலயம்,
289, எஸ்பிளனேட்,
மதராஸ்—1.

ஸ்ரீ கமல்
தயாரிப்பு
மகாத்மா
உதங்கர்
டைரக்ஷன்:
பட்டு அய்யர்
நடிக்கும்
கொத்தமங்கலம் சீனு, விஜயகுமாரி,
பேபி கமலா, டி. ஆர். ராமசந்திரன்,
கே. ஆர். செல்லம், கோபிநாத்,
சௌடாமணி முதலியோர்.
Studio Meneses
விபரங்களுக்கு: டி.பி. சுந்தரம், பாலாஜிநகர், சென்னை